ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

ஒருவன் சொற்படி நடப்பதற்கு அவன் சொல்லுவதை நம்புவதே காரணம். நம்பிக்கையில்லாவிடில் பிரவிருத்தியே உண்டாகமாட்டாது. பிராமாணிகனான ஆப்தன் சொல்லுவதே நம்பத்தக்கதாகும். அது வேறு ஒருவன் சொல்லுக்கு விரோதப்படுமாயின் அப்பொழுது அப்படி அவன் விரோதமாகச்சொல்வதற்குக் காரணமென்னவென்று விசாரிக்கவேண்டும். பிராந்தியால் கூறப்பட்டதா? அல்லது ஏமாற்றவேண்டுமென்ற கெட்ட எண்ணத்தாலேற்பட்டதா? அல்லது தவறுதலாலேற்பட்டதா? அல்லது தன்னுடைய க்யாதி, லாபம், பூஜை முதலிய தன் பிரயோஜனத்தில் வைத்த ஆசையாலாகியதா என்பதாதி விசாரணை செய்துபார்க்கும்போது கீழ்காட்டியவைகளுள் ஏதேனுமொரு காரணத்தால் அந்த விரோதவார்த்தை ஏற்பட்டதாக விலக்குமானால் அந்தக்காரணத்தாலேயேஅது விலக்கத் தக்கதாய்விடுகிறது. ஒரு காரணமுமில்லாமலேற்பட்டதானால் வெவ்வேறு அதிகாரியை உத்தேசித்துக் கூறப்பட்டதாயிருக்கவேண்டுமென்று தெரிந்துகொள்ளவேண்டும். உதாரணமாகத் தயிரின் குணதோஷசிந்தை செய்யும்பொழுது ஒரு ஆப்தர் தயிரை ஸேவிக்கக்கூடாது என்றும், மற்றொரு ஆப்தர் அதை ஸேவிக்கலாம் என்றும் சொன்னால் ஆங்கு பயத்தம் பருப்பு, சர்க்கரை, நெய், தேன்முதலியவைகளைச்சேர்த்துக்கொண்டவன் தயிரை ஸேவிக்கலாம். அப்படியல்லாதவன் ஸேவிக்கக்கூடாது என்று விரோதபரிஹாரம் செய்துகொள்ளவேண்டும். காலபேதத்தாலாவது பரிஹாரம் செய்துகொள்ளலாம். அதாவது இரவில் தயிரை உபயோகிக்கக் கூடாது. பகலில் உபயோகிக்கலாம் என்றுபரிஹாரம் ஊஹித்துக்கொள்ள வேண்டும். அல்லது ஜ்வராதியவஸ்தையில் தயிர்கூடாது. மற்ற ஸ்வஸ்தாவஸ்தையில் சேர்க்கலாமென்றாவது நிர்ணயித்துக்கொள்ளவேண்டும். இதற்காகத்தான் சாஸ்திரத்தில் விகல்பமென்பது ஆசிரயிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு திருஷ்டவிஷயங்களிலிருப்பதுபோலவே அதிருஷ்ட விஷயங்களிலும் பிரமாணவசனங்கள் ஒன்றற்கொன்று விரோதப்படுமானால் பிரபலப்ரமாணத்தையனுஸரித்து மற்றவைகளை வைத்துகொள்ள வேண்டும். எல்லா பிரமாணங்களிலும் பிரபலமாயுள்ளது சுருதியொன்றே அதையனுஸரித்துத்தான் மற்ற ஸ்மிருதி புராணம் முதலியவைகளுக்கு அபிப்பிராயம் கற்பிக்கவேண்டும். சுருதிவாக்யங்களே ஒரே விஷயத்தில் ஒன்றற்கொன்று விரோதப்படுவதாகக் காணப்பட்டால் அவைகளிலும் பிராபல்யமான தௌர்ப்பல்யங்களைத் தெரிவித்திருக்கும் நியாயப்படி வைத்துக்கொள்ளவேண்டும். ஆங்கு தௌர்பல்யகாரணங்கள் எவையுமில்லாவிட்டால் விகல்பத்தையாசிரயிக்கவேண்டும். இவ்வாறு பிரமாணங்களின் அதிலும் வேதத்தின் பரமகம்பீரமான அபிப்பிராயத்தை விசாரணை செய்து அதிலிருந்து தெரிந்துகொள்ளவேண்டியதேயன்றி அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று கண்டவர் சொல்லுவதையெல்லாம் கேட்டுவிடக்கூடாது. ஆகவே வேதத்தில் கூறப்படும் பரலோகம், கர்மகதி, சிராத்தம் முதலியவைகளை நம்பி அதனால் பித்ருக்களுக்கு திருப்தியுண்டாகுமென்ற விசுவாஸத்தோடு சிராத்தாதிகளைசசெய்து யாவரும் ஸகல சிரேயஸ்ஸையுமடைவார்களாக,

சுபம்.　　　　பத்திராதிபர்,

உ

# ஆர்யதர்மம்.

பிரமோத-௵ ஆவணி-௴ ௧௫௨

## பரலோகம்.

சப்தப்பிரமாணத்தால் போதிக்கப்படும் பரலோகம் முதலியவைகளில் பூர்ணநம்பிக்கையிருக்கவேண்டியது அவசியம். அப்படி நம்பிக்கை வைத்து பரலோகஸாதனங்களாகிய தானம், யாகம், சிராத்தம் முதலியவைகளைச் சரிவர அனுஷ்டித்துவந்தால் எங்கும் சுகமாயிருக்கலாம். பரலோகத்தை நம்பாமலும் பித்ருக்களின் திருப்திக்காக சிராத்தாதிகளை அனுஷ்டிக்காமலும் கண்டபேர் பேச்சைக் கேட்டுக்கொண்டு இங்கு சும்மாயிருந்துவிட்டால் இச் சரீரம் விட்டுப்போய் யமதர்மராஜாசட்டப்படி கடுமையானசிக்ஷை நரகத்தில் விதிப்பதைத்தடுத்து அந்தக் கஷ்டத்தையனுபவிக்காமலிருக்கும்படி செய்வதற்குக் கண்டபேர் வரமாட்டார்கள். ஒண்டியாகவேதான் போய் கஷ்டப்படும்படி நேரும். பிறக்கும்பொழுதும் பலபேர்களுடன் பிறக்கவில்லை, அதுபோல் இறக்கும்பொழுதும் பலபேர்களுடன் போகவில்லையென்பது எல்லோருக்கும் அனுபவஸித்தமிது. சிராத்தவிஷயத்தில் சங்கையுண்டாகலாம். அதன் ஸமாதானத்தைப்பார்த்தால் அச்சங்கையெல்லாம் விலகிவிடும். அந்த ஸமாதானம் அடுத்தபடி எழுதப்படுகிறது. நமது சாஸ்திரங்களில் ஆராய்ச்சிசெய்துபார்த்தால் தற்காலத்திய சிலருக்குத் தோன்றிய சங்கை சங்கையாகவேமாட்டாது. அவ்வளவு சங்கைகளையுமெடுத்துக்காட்டி அவைகளுக்கெல்லாம் சரியான ஸமாதானம் கூறப்பட்டிருக்கின்றது. ஆசங்கைசெய்து ஸமாதானம் செய்யப்பட்டால் ஆட்டி ஆட்டிநாட்டப்பட்டது ஸ்திரமாய் நிலைப்பதுபோல் நிலைக்கும். ஸ்ரீதரஸ்வாமியும்—

सुहृद्भिस्सह विचार्य ज्ञात्वैव कर्म कर्तव्यम् । न तु गतानुगतिकमात्रेण ॥

"ஆப்தர்களோடு நன்கு விசாரணைசெய்து நிச்சயமாகத்தெரிந்துகொண்டுதான் செய்யவேண்டுமேயல்லது விசாரிக்காமல் நடப்பவனையொட்டி நடத்திவிடக்கூடாது"

என்று கூறுகின்றார். ஆகையால் சிராத்தவிஷயத்தில் சேர்ந்த சங்கைகளுக்கு ஸமாதானம் சாஸ்திர ஆதாரத்துடன், எழுதப்படு கிறது. அதைநன்றாக ஆராய்ந்துபார்த்து சாஸ்திரத்தில் விஸ்தாரந் தம் கூறியிருக்கிறபடி யாவருமனுஷ்டித்து சிரேயஸ்ஸையடைவார் களாக.

சுபம்

பத்திராதிபர்.

---

ஸ்ரீ வேதவ்யாஸாய நம:

## தஞ்சையில் ஸ்ரீ வேதவ்யாஸ மஹோத்ஸவமும் தஞ்சாவூர்ஜில்லா பிராம்மண ஸநாதனதர்மஸம்ரக்ஷண ஸபா பிரதமவர்ஷபூர்த்தியும்.

நாளது பிரமோதூத-ஸ்ரீ ஆடி-மீ 26உக்குச் சரியான (10—8—30) காயத்ரீஜபதினமாகிய ச்ரவண கிருஷ்ண பிரதமை பானுவாரம் கூடிய தினத்தில் எற்கனவே இந்த ஸபையிலிருந்து வெளியான 5வது ஸநாதனதர்ம துண்டு பிரசுரத்தில் விவரிக்கப் பட்டிருந்தபடி 'ஸ்ரீவேதவ்யாஸ மஹோத்ஸவமானது' விமரிசை யாய்க்கொண்டாடப்பட்டது.

இதற்கு இப்போது தஞ்சையில் வசிக்கும் ஸ்ரீ சிவப்பிரகாசா னந்தகிரி பரிவ்ராஜகாசார்யாளும், அத்வைதஸபா அத்தியக்ஷக ரான பஞ்சநதக்ஷேத்திரம் பிர்ம்மஸ்ரீ விச்வநாதசாஸ்திரிகள் அவர்கள், சேங்காலிபுரம் பிர்மஸ்ரீ வைத்யநாதசாஸ்திரிகளவர்கள் மன்னார்குடி பிர்ம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸசாஸ்திரிகளவர்கள், திருக்கருகா வூர் ஸ்ரீமான் T. L சுப்பய்யர் B.A, அவர்கள், ரிடையர்டு டிஸ்டி ரிக்டு ரிஜிஸ்டிரார் ஸ்ரீமான் A. V. நாகராஜராவ் B. A, அவர்கள், ரிடையர்டு ஸப்ரிஜிஸ்டிரார் ஸ்ரீமான் C. V. கிருஷ்ணஸ்வாமி அய் யர் அவர்கள் முதலிய ஆஸ்திக பிரமுகர்களும் விஜயம் செய்தி ருந்தார்கள்.

ஷை மகோத்ஸவத்தில் பிர்ம்மஸ்ரீ விச்வநாத சாஸ்திரிகள் அவர்கள் அக்கிராஸனம் வகித்தார்கள்.

சென்ற ஸம்வத்ஸரத்தில் ஷை ஸபையோர் செய்தவேலைகளை யும் ஸபையின் இதர வரலாறுகளையும்பற்றி அடியில்கண்டபடி

ஸபை காரியதரிசியால் எடுத்துரைக்கப்பட்டபிறகு சதுர்வேதத்தைப்பற்றி இப்போது தஞ்சையில் சப்ரிஜிஸ்ட்ராராயிருக்கும் பிர்ம்மஸ்ரீ R. கிருஷ்ணஸ்வாமிசாஸ்திரிகள் B A. அவர்கள் சுருக்கமாய் உபந்யாஸம் செய்தார்கள். B. A. பட்டம்பெற்று ஸர்க்கார் உத்தியோகத்திலிருந்துகொண்டே நம்வேதசாஸ்திரங்களையும் பூராவாக கசடறக்கற்று வைதிகசிஷ்டாசாரங்களை கைவிடாமல் ஆஸ்திக புத்தியோடிருக்கும் இம்மஹானைப்பார்த்தாவது ஆங்கிலப்படிப்பின் பயனாக தாறுமாறாய்த் திரியும் இதர பிராம்மணர்கள் ப்ராசீன ஆசாரங்களைக் கைப்பற்றி நடப்பதுதான் ஒழுங்கும் புத்திசாலித்தனமுமாகும்.)

அதன்மேல் சேங்காலிபுரம் சாஸ்திரிகள் அவர்கள் 'காயத்ரீ'யின் அர்த்தத்தையும் அதன் 'மாஹாத்மிய'த்தையும் நன்கெடுத்துரைத்தார்கள்

அக்கிராஸனம் வஹித்த பிர்ம்மஸ்ரீ விச்வநாதசாஸ்திரிகளவர்களும் திருக்கருகாவூர் ஸ்ரீமான் T. L. சுப்பையர் அவர்களும் ஸநாதநதர்ம ஆஸ்திகர்கள் செய்யவேண்டிய வேலைகளைப்பற்றிப் பேசினதோடு சாரதாசட்டத்தையும் வரசுங்கம்வாங்குகிறகொடிய வழக்கத்தையும் கண்டித்துப்பேசினார்கள்.

மேலும் ஸ்ரீவைஷ்ணவர்கள், மாத்வர்கள், அத்வைதிகளான இதர ஸ்மார்த்தர்கள் ஆகிய த்ரிமதஸ்தர்களும் ஒன்றுசேர்ந்து ஐகமத்யத்துடன் பிராஹ்மண்யத்தைக்காப்பாற்ற உழைக்க வேண்டுமென்று பிர்ம்மஸ்ரீ T. கோதண்டராமய்யங்கார் B.A., M.L. அவர்களும் அக்கிராஸனாதிபதி முதலியோரும் வற்புறுத்தினார்கள்.

அன்றிரவு பிர்ம்மஸ்ரீ ரகுநாதசாஸ்திரிகள் அவர்களால் சீதாகல்யாணப்ரகாணமானது பாகவதஸம்பிரதாயப்படி அழகாய் நிரூபணம் செய்யப்பட்டது.

## ஸபையின் வரலாறு

மனிதர்கள் செவ்வையாயிருக்கிற காலங்களில் பகவானைத் தியானம்செய்வது துர்லபம். ஏதாவது ஆபத்துக்கள்நேருங்காலத்தில்தான் ஈசுவரஞாபகம் வருவது ஸஹஜமாயிருக்கிறது. அதற்கிணங்க நம் பிராம்மணஸமூஹத்தின் ஸ்தைர்யத்துக்கு மேலுக்குமேல் இடையூறுகள் உண்டாகவே நம் ஸமூகத்தின் நிலைமையைக் கொஞ்சம் கவனிக்கவும், ஆபத்துகளின் நிவர்த்திக்காக பகவானை

ப்ரார்த்திக்கவும் நம் ஸநாதன தர்மத்துக்கு ஏற்பட்டிருக்கும் கேடு களைப்பற்றி முறையிடவும் நம் தோஷங்களை சீர்திருத்த வழிதேட வும் சில ஆஸ்திகர்கள் பலவிடங்களில் சென்ற வருஷத்தில் ஸபை கள் ஏற்பாடு செய்தார்கள். அப்படிப்பட்ட ஸபைகளில் இதுவு மொன்று. இன்னமும் பிராம்மணர்களுக்கு சரியான உணர்ச்சி ஏற்படவில்லையாயினும் அங்கே கூடியிருக்கும் ப்ராஹ்மண்யத்தை இப்போது நான் பார்க்கையில் மனது கலங்கவேண்டியதில்லை என்றும் கூடிய சீக்கிரத்தில் நமக்கு நல்லகாலம் பிறக்குமென்றும் ப்ராம்மணர்களின் தேஜஸ்ஸானது அபிவிருத்தியடையுமென்றும் நம்புகிறேன்.

பிராம்மணரல்லாத இதர ஜாதி ஸநாதன தர்மிகளும் நம்மைச் சேர்ந்தவர்களே. பிராம்மணர்கள் பிராசீன ஆசாரங்களிலிருந்து மேல்நாட்டு நாகரீகத்தாலும் துர்தசையாலும் நழுவி வருவதால் அவர்களை சீர்திருத்த இந்த ஸபையானது பிராம்மணர்களுக்கு என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எல்லா ஜாதிகளுமடங்கிய ஒரு ஸநாதன தர்மஸபை இந்த ஜில்லாவில் ஏற்படவேண்டியது அவசியமே.

ஸபைஸ்தாபனம் இந்த ஸபையானது சென்ற சுக்கில-வருஷ ஆவணி மீ 13உக்குச் சரியான (28—8—29) ஸ்ரீ ஜயந்திதினம் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின் கிருபையை முன்னிட்டு அடியேனு டைய கிருஹத்தில் கூடின சில பிராம்மண சிநேகிதர்களால் ஸ்தா பிக்கப்பட்டது. அன்று 11பேர்கள் கூடியிருந்தார்கள். பிரம்மஸ்ரீ டி. கோதண்டராமய்யங்காரவர்கள் அக்ராஸனம் வஹித்தார் ஸபைவிதிகளை ஏற்படுத்தி ஐந்துபேர்களடங்கிய ஓர் நிர்வாகஸபைக்கு ஷை அய்யங்கார் அவர்களை அத்யக்ஷராகவும் அடியேனை காரிய தரிசி பொக்கிஷதாரரென்றும் ஸ்ரீமான் S. காசிராம் பாண்டியா அவர்கள், ஸ்ரீமான் R. ராமசேஷய்யர் B.A., B.L., அவர்கள், ஸ்ரீ ஸ்ரீமான் S. பஞ்சாபகேசய்யர் அவர்கள் B.A., B.L., ஆகிய இம் மூவரையும் இதர அங்கத்தினராகவும் தெரிந்தெடுக்கப்பட்டது.

ஸபையின் நோக்கங்கள்

இந்த ஸபையின் முக்கிய நோக்கங்களாவன:—

(1) ச்ருதிஸ்மிருதிகளில் சொல்லியபடி பரம்பரானுஷ்டானத் துக்கு விரோதமன்னியில் ப்ராஹ்மண்யத்தைக் காப்பாற்றுவதும் அதை அபிவிருத்தி செய்வதும்.

(3) தஞ்சை ஜில்லாவில் பிராம்மணர்கள் வசிக்குமிடங்களில் நித்யகர்மானுஷ்டானங்கள், முக்கியவேதமந்திரங்கள் முதலியவைகளை போதிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்தல்.

பிராம்மணர்களுக்காக ப்ரத்தியேகமாய் தற்காலத்தில் ஷ்ரப் பள்ளிக்கூடங்கள் ( Elementary Schools ) ஏற்படுத்தி அவைகளில் ஸர்க்கார் போதனைமுறை இலாகாபடிப்போடு நித்ய கர்மானுஷ்டானங்கள், முக்கியவேதமந்திரதந்திரங்கள் முதலியவைகளையும் நீதிசாஸ்திரம், விஷ்ணுஸஹஸ்ரநாமம், புருஷஸூக்தம், ஸ்ரீஸூக்தம் முதலியவைகளையும் கற்பிப்பதோடு ......வேதாத்தியயனமும் நடத்த ஏற்பாடுசெய்தல்.

(4) உபநிஷத் முதலியவைகளைப்பற்றி உபன்யாஸங்கள் நடப்பித்தல்.

(5) பிராம்மணர்களின் க்ஷேமத்திற்குரிய இதர விஷயங்களை கவனித்தல்.

ஸம்மேளனங்கள்.

சென்ற வருஷத்தில் மஹாஸபை 5 தடவையும் நிர்வாஹ ஸபை 5 தடவையும் கூடப்பட்டது. இவைகளைத் தவிர இந்த ஸபையின் ஆதரவில் திருவாதி ஸம்மேளனம் 12—1—1929ல் நடத்தப்பட்டது.

இந்த ஸபைக்கு ச்ராவணத்திற்கு ச்ராவணம் ஒரு வருஷமாகுதலால் இன்று ஸம்வத்ஸரபூர்த்தி உத்ஸவம் ஏற்பட்டது.

பிரசுரங்கள்.

இந்த ஸபையிலிருந்து 5 ஸநாதனதர்ம (Series) துண்டு பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டன.

உபன்யாஸங்கள்.

திருவாதி ஸம்ஸ்கிருத கலாசாலை பிரதமாசாரியார் பிர்ம்மஸ்ரீ S. வேதாந்தமய்யங்கார் M.A. அவர்களும் சேங்காலிபுரம்பிர்ம்மஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள் அவர்களும் பிர்ம்மஸ்ரீ தியாகராஜசாஸ்திரிகள் அவர்களும் (1) ஸநாதனதர்மம் (2) ஆஹ்நிகம் (3) பிராஹ்மண்யம் (பிர்ஹ்மசர்யம் இந்த விஷயங்களைப்பற்றி உபன்யாஸங்கள் செய்தார்கள்

காஞ்சிபுரம் K. ராமானுஜாசாரியார் அவர்களைக்கொண்டு ஸம்ஸ்கிருதபாஷையில் எளியநடையில் (1) குசேலோபாக்யானம்

(2)துருவசரித்திரம் (3)அம்பரீஷோபாக்யானம் ஆகிய இம்மூன்று பக்தர்களின் கதைகளைப்பற்றி பிரஸங்கம் நடப்பிக்கப்பட்டன.

கிளைஸபைகள்:— இந்த ஸபையின் கிளைகளாக (1) மஹாராஜபுரம், (2) கல்யாணபுரம், (3) தில்லஸ்தானம், (4) பூதலூர், (5) க்ஷேமம், (6) தண்டாங்கோரை இந்த கிராமங்களில் கிராமஸபைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

பாடசாலை:— 26—2—1930-ல் தஞ்சை ஸ்ரீகொங்கணேசுவரஸ்வாமிகோயிலில் கூடிய மஹாஸபையில் தீர்மானிக்கப்பட்டபிரகாரம் நம் நகர் மேலவீதி ஸ்ரீகாசி விச்வநாதஸ்வாமிகோயிலில் பிராம்மண ஆண்குழந்தைகளுக்கும் பெண்குழந்தைகளுக்கும் பிரத்தியேகமாய் 5-வது வகுப்புவரையில் 'ஆர்யமதபாடசாலை' என்று ஒரு கீழ்தரபாடசாலை (Elementary School) சென்ற வைகாசி-மீ 30உக்குச்சரியான 12—6—1930-ல் ஸ்தாபிக்கப்பட்டு நடந்துவருகிறது. அதில் சுமார் 60 குழந்தைகள் படிக்கிறார்கள். அதில் இதர பள்ளிக்கூடங்கள் ஒப்பந்தம் தேறின உபாத்தியாயர்களைக்கொண்டு லௌகிகப்படிப்பு போதிக்கப்படுவதில் ஸம்ஸ்கிருதபாஷையும் கற்பிக்கப்படுகிறது. இதர பாடசாலைகளில் இல்லாத சில முக்கிய அம்சங்கள் இதில் உண்டு. அவையாவன:—

(1) குழந்தைகளின் ஆசாரங்களை முக்கியமாய் கவனிக்கப்படுகிறது.

(2) ஸம்ஸ்கிருதபாஷையை கீழ்வகுப்பிலேயே ஆரம்பித்து நீதிசாஸ்திரம், பகவத்ஸ்தோத்திரங்கள் முதலியவை கற்பிக்கப்படுகின்றன.

(3) இதர பெரிய பள்ளிக்கூடங்களில் லௌகிகப்படிப்புமட்டில் கற்று நம்முடைய மதவாஸனையில்லாமலும் ஸதாசாரங்களை விட்டு துராப்பியாஸங்களை கைக்கொண்டும் ஈசுவரபக்தி கெட்டுப் போகாமலிருக்கும்படி உபநயனமான குழந்தைகளுக்கு ஷெ பள்ளிக்கூடநேரங்களுக்குப்பிறகு ஸந்தியாவந்தனம் வேதாத்யயனம் முதலியவைகளைக் கற்பித்து ப்ராசீனசதாசாரங்கள் போதிக்கப்படுகிறது. இப்படி 17 குழந்தைகள் இப்போது அத்தியயனம் செய்கிறார்கள்.

ஷெ பாடசாலையானது தஞ்சைவாஸிகளான பிராம்மணர்களின் மாதவரிச்சந்தாவைக்கொண்டும் பின்னும் சில பிரபுக்

களின் உதவியைக்கொண்டும் நடந்துவருகிறது. ஆஸ்திகதனவான்கள் இதற்குத்தக்க பொருளுதவிசெய்வார்களென்று நம்புகிறேன்.

வேதபாடசாலை விஷயத்தில் இப்போது பேலவீதி ருஜிலியாள் மடத்திலிருக்கும் ஸ்ரீசிவப்ரகாசானந்தகிரி பரிவ்ராஜகாசார்யஸ்வாமிகள் அவாகள் எடுத்திருக்கும் சிரத்தைக்கு நாம் மனப்பூர்வமான வந்தனமளிக்கக்கடவோம். மேலும் தன் தொழிலைப் பாராட்டாமலும் வெய்யிலையும் சிரமத்தையுமகவனிக்காமலும் வேதபாடசாலை விஷயமாக அடியேனுடன்கூடஉழைத்துவரும் ஸ்ரீமான் R.ராதாகிருஷ்ணய்யர் அவர்களுக்கும் வேதபாடசாலைக்கும் பொருளுதவி செய்துவரும் அசேஷமஹாஜனங்களுக்கும் என் நன்றியறிதலைத் தெரிவிக்கிறேன்.

கட்டடம்:— ஸநாதனதர்மிகள் கூடுவதற்கு பிரத்தியேகமாக இந்நகரில் கட்டடம் ஏற்படவேண்டியது அவசியம். நமக்கு சௌகர்யமான கட்டடமில்லாதது ஒரு பெருங்குறைவு. அப்படி கட்டடம் ஏற்பட்டால் அது பாடசாலை நடத்தவும் உபயோகப்படும். பிறர் தயவின்றி நாம் அடிக்கடி கூடவும்கூடலாம்.

நிதி:— மேலே கண்ட விஷயங்களுக்கு ஒரு பெரிய மூலதனம் அவசியம். ஒரு சிநேகிதர் என்னிடம் தெரிவித்தபடி இலகுவாயும் கொஞ்சமகொஞ்சமாயும் இதை சேகரிக்கலாம். அதாவது சில தனிகர்கள் சேர்ந்து கூட்டுச்சிட்டுப்போட்டு ஒரு சீட்டை தர்மத்துக்கென்று ஏற்படுத்தி தர்மச்சீட்டை முதலில் எடுத்துவிடுவதேயாகும். இதுதவிற நம்மவர்கள் கிருஹங்களில் நடக்கும் சுபசோபனுதிகளிலும் இதர சந்தர்ப்பங்களிலும் அனுக்ஞை, பூரி, சம்பாவனை இவைகளில் ஸநாதனதர்மத்துக்கு ஒரு பங்கு எடுத்து ஒவ்வொரு கிருஹஸ்தர்களும் இதை ஸபைக்குச் சேர்ப்பிக்க ஏற்பாடு செய்யவேண்டியது. நேற்று ச்ராவண தினத்தில் இந்த உத்தேசமாகவே தஞ்சையில் உண்டிவருலும் செய்யப்பட்டது. இந்த நிதியானது ஒரு லக்ஷருபாய்வரையிலாவது சேர்ந்தால் தஞ்சைஜில்லாவில் ஸநாதனதர்மஸம்ரக்ஷணம் செய்ய ஏற்பாடுகள் செய்வது ஒருவாறு சாத்தியமாகும். இப்படி எல்லா ஜில்லாக்களிலும் நடக்கவேண்டும். இந்த நிதிக்குத் தக்க பிராம்மணபிரமுகர்களை டிரஸ்டிகளாக நியமிக்கவேண்டும்.

ஸபையின் வரவு செலவு கணக்கு:—

| | |
|---|---|
| ஸாதாரண சந்தா வரவு | 33—14—0 |
| விசேஷசந்தா வரவு | 13— 8—0 |
| திருவாதி ஸம்மேளனவசூலிலிருந்து | 47—15—3 |
| ஆகக்கூடுதல் | 95— 5—3 |
| செலவு | 86— 9—3 |
| போக பாக்கியிருப்பு | 8—12—0 |

குறிப்பு:— திருவாதி ஸம்மேளன சம்பந்தமாக அச்சிட்டு வெளியிடப்பட்ட வரவு சிலவு கணக்கில் கண்டபடி மீதியான துகை ரூ. 350—0—0ம் ஸ்ரீமான் R. ராமசேஷய்யர் அவர்கள் பேரால் தஞ்சை சாச்வதநிதியில் போட்டுவைக்கப்பட்டிருக்கிறது.

பிராமணர்களுக்குள் சிரத்தையும் ஒற்றுமையும்:— நமக்கு விருத்தமான மேல்நாட்டு நாகரீகத்தாலும் மேல்நாட்டுப்படிப்பினுலும் பிராம்மணர்களுக்கு தங்கள் மதத்தில் சிரத்தையும் நம்பிக்கையும் குறைவுபட்டிருக்கிறது. ஆனால் அடியோடு கெடுவதற்குள் சிரத்தாளுக்களான பிரபுக்கள் முன்வரவேண்டும். இந்நகரில் ஸபைகூடுங்காலங்களில் செலவழியும் துண்டுபத்திரிகைகளுக்குத் தக்கபடி கூட்டம் சேருகிறதில்லை. இனி இவ்வளவு அசிரத்தையாயிருக்கமாட்டார்களென்று நம்புகிறேன். ஒன்றுகூடி ஒற்றுமைப்பது என்ற குணமானது பிராமணேதரஜாதிகளிடத்தில் காணப்படுவதுபோல் பிராமணர்களிடத்தில் காணப்படாததால் தான் நாம் எந்தவகையிலும் அபிவிருத்திஅடைவது சிரமமாயிருக்கிறது. நமக்கு எதிலும் யாரிடத்திலும் ஸந்தேஹம்தான். நாம் எல்லோரும் புத்திசாலிகளானபடியால் ஒருவர்தலைமைவஹிப்பதை நாம் ஸஹிக்கிறதில்லை. சேனதிபதியில்லாத ஸைந்யம்போலிருக்கிறோம். இக்காலத்தில் நம் தசையையறிந்தாவது சிரத்தையும் ஒற்றுமையும் ஏற்படவேண்டும். சுபமஸ்து.

ஜி. வி. லக்ஷ்மணசாஸ்திரிகள்,
கார்யதரிசி.

# தஞ்சை பிரும்மசர்ய ஆச்ரமம்.

## தர்ம பாலனம் எங்கே ?

ஸர்வகலைகளுக்கும் வித்தைகளுக்கும் முக்கியமாம் 64-கலைகளுக்கும் 32-வித்தைகளுக்கும் ஆசாரியர்கள் பாதகண்டத்தில் பாழ்த்துவிட்டார்களே ! வேதாந்தசாஸ்திரத்தைமட்டுமே ப்ரவசனம் செய்ய துடங்கியகாலந்தான் வித்யாகலைகளின் ப்ரசாரத்துக்கு உண்டான மறைவின் ஆரம்பகாலம். வேதாதியாகிய கர்ம காண்டத்தை அனுஷ்டித்துப்பழக்கியபின்னர் அல்லவோ வேதாந்தத்தில் பிரவேசிக்க வேண்டும். கர்மகாண்டத்தில் தடையிடாமல் ஞானகாண்டத்தில் ஆழந்தெரியாமல் காலிட்டுக்கொண்டேனே என்று தவிக்குமாப்போல் அகப்பட்டு பாதித்து புத்தி பேதித்து கர்மத்திலும் இல்லாமல் ஞானத்திலும் நிலையாமல் கர்மத்தையும் விட்டு ஞானத்தையும் பெறுமல் இரண்டுங்கெட்டவனுய் (இரண்டாங்கெட்டானுய்) இருகொள்ளி எறும்புபோல் அறிந்தோர் தவித்து நிற்கிறோம். எவ்வளவு காலமாக என்று நிதானிப்போம்.

புராணபவுத்தன் காலத்தில் ஆரம்பமானுலும் அக்காலம் அப்பொழுதே மறைந்துவிட்டதே ! சரித்திர (History) பவுத்தன் காலத்தில் சூன்யவாதத்தை பிரதானமாகக்கொண்ட தனிமதம் கிளம்பியகாலமே தனி வேதாந்த சண்டையில் முளைப்புக்காலம். அன்று ஆரம்பித்த வேதாந்தசண்டை இன்னும்முடிவடையவில்லை. இச்சண்டையின் இடையில் வித்தைகளை மறந்தோம், கலைகளை இழந்தோம், மறைகள் மறைந்தன, கிரந்தங்கள் இறைந்தன, ஆட்டுக்கிடாய்ச் சண்டையில் ஆனந்தம் கொண்டிருந்த சந்நியாசி பொன்முடிப்பு இழந்த பஞ்சதந்திரக்கதையாயிற்று. இரும்புவேலை, கல்வேலைமுதல் ஸகலகலா ஆசாரியாள் பொருள்பொங்கும் சீர்மையிலே ஸ்கேல் ஆணி முதல் உத்தரம் வரையில் சீர்மை சாக்குகளன்றே ? தெரிந்ததை விரிக்கின் தெரிவது மறைந்துவிடும்.

அத அதோ ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா வேதாதியறிவின் பின்னர் அதின் முடிவாக பிரும்மஞான அறிவில் ஆசை அடையவேண்டும்.

பிரும்மஞானம் பெறுமுன் தர்மஞானம் பெறவேண்டும். தர்மஞானம் கர்மத்தில் ஆழ்த்தும், பிரும்மஞானம் முக்தியில் விழ்த்தும். கர்மத்தில் ஆழ்ந்திருந்தே முக்தியில் இறக்கும் மார்கம் யோகம். இந்த யோகத்தைப் போதிப்பதே "பகவத்கீதை." இந்த கீதாசாஸ்திரந்தான் கர்மசூத்ரங்களையும் ஞானசூத்திரங்களையும் இணைக்கும் தர்மக்கோர்வை.

"பானை நினைந்து இம்மூன்றும் (தர்மம் அர்த்தம் காமம்)விட்டிலே வீடு" என்று ஒளவையார் வர்ணித்ததற்கு ஒப்ப பிரும்மத்தை நினைத்துக்கொண்டே கர்மத்தை அனுஷ்டிப்பதே பரமபதம் அடைவிக்கும் ஸோபானம் (படிக்கட்டு). இவ்வித மனோநிலைமை பால்யம் முதல் அப்யசித்துஅப்யசித்து உறுதியடையவேண்டும்.

வளையும் நிலையிலுள்ள இளம் நாம்புகள் பாவியிருக்கும் இளமைப்பருவத்திலேயே முதுமைப்பருவத்தில் பெறவேண்டியகுறிக்கோள் (Ideal) நிலைமைக்குத் தயாரிக்கவேண்டும்.

1. நான்காவது ஸன்யாஸ ஆச்ரமத்தில் செய்யவேண்டிய யோகத்துக்கு அனுகூலமாக இருக்கும்படி சரீர அப்யாஸ முறையினால் (Bodily Exercises) நரம்புகளை வலுவுறச் செயல்.

2. நல்ல நடத்தை, நீதிபோதம் மத அறிவு, பழக்கத்தினால் மனப்போக்கை சீர்ப்படுத்தல்.

3. சரீரத்தைப் போஷித்து திருடகாத்ரமாக இருக்கவேண்டிய பொருள் ஸம்பாதனத்துக்கு அவசியமான உபாத்யாய (புரோஹித) முறையும், ஒரு தொழில் முறையும் பயிற்றுவித்தல்.

4. அறிவுபெறவேண்டி ஸம்ஸ்கிருதம் முதலான முக்கிய பாஷைகளில் தேர்ச்சி பெறுவித்தல்.

5. கர்ம ஆசரணையில் உடலையும் மனத்தையும் பழக்கவேண்டி ஸந்தியாவந்தனம், ஸமிதாதானம், பிக்ஷாடனம்முதலான விரதங்களில் ஈடுபட செய்தல்.

இப்பயிற்சி பெற விரும்புவோருக்கு ஆதரவு அளிக்கப்படும்.

ஸாரம். இரங்காசாரியன்,
குஜலிமடம், மேலவீதி தஞ்சாவூர்.

---

கோவர்த்தன மடாதிபதிகளான
108 ஸ்ரீமத் சங்கராசாரியாவர்களது

# திருவாக்கு.

(358:வது பக்கத்தொடர்ச்சி.)

ஆகவே மேற்றிசையார்களைப் பார்த்துப்பார்த்து அவர்கள் போல் நாம் சுகமடையவேண்டுமென்று ஆசைப்படுவது நம் தேசத்திற்கு ஒவ்வாது. எக்காலம் வரை நம்மிடம் வர்ணாசிரம தர்மானுஷ்டானம் பூர்ணமாய் அனுஷ்டானத்திலிருந்ததோ அது வரை நமக்கு பூரண ஸ்வாதந்திரியம் இருந்தது. எங்கு தர்மம் வரவர குன்ற ஆரம்பிக்கிறதோ அங்கு சுகம் ஐச்வர்யம்முதலியன ஸ்திதிபெறவில்லை என்பது பிரத்யக்ஷம். ஆகவே அத்தகைய தர்மத்தை அனுஸரிக்கும் நாம் ஸ்வராஜ்யத்தையடைய அது சொல்லும் வழியில் லக்ஷக்கணக்கான ஸாதனங்களையும் கஷ்டப்பட்டனுஷ்டிப்போம். அதல்லாத ஒன்றிலும் பிரவேசிக்கமாட்டோம்.

இதொன்று இங்கு ஆலோசிக்கப்படவேண்டியதுண்டு. ஸம்பூர்ணஸ்வாதந்திரியத்தை விரும்புகின்ற ஸனாதனதர்மிகளான நமக்கு ஸ்வாதந்திரியத்தையடைய பலவழிகளிருப்பினும் வர்ணாச்ரமஸ்வராஜ்யசங்கத்தை எவ்விதம் ஸ்தாபிக்கவேண்டுமென்பதை நன்கு யோசிக்கவேண்டும். ராகத்வேஷத்தை விலக்கிய ஆஸ்திக சாதுக்கள்தான் இவ்விசாரத்திற்குரியவர்கள், இருக்கட்டும், இப்போது தேசத்தின் நிலையை கவனிப்பாம்.

ஒருபுறம் ராஜப்ரதிநிதிகள் எப்படியாவது தங்கள்காரியத்தை முடித்துக்கொள்வதுதான் பரமஸாதனமென்றுகொண்டு அதற்கு தங்களுடைய கிறிஸ்துதர்மஸித்தாந்தத்திலிருந்துகூட நழுவுகிறார்கள். மற்றோர்புறம் இந்திரன் முதலியவர்கள் பிழைப்புக்கு முக்கிய ஆதாரமான பூலோகத்தில் பிறந்த மகான்களும் விபரீதமார்க்கத்தில் புறண்டுழல யத்தனிக்கிறார்கள். எவர்கள் ஒருசமயத்தில் உலகம் முழுமைக்கும் முதன்மைபெற்றவர்களென்று புகழ்ப்பெற்றார்களோ அவர்களது வம்சத்திற் பிறந்தவர்களே இப்பொழுது ஸனாதனதர்மத்தை அடியோடு துலைக்காமற்போனல் நமக்கு ஒருபோதும் ஸ்வாதந்திரியம் கிடைக்காதென்று கதறுகிறார்கள். என்ன விபரீதம்? அந்தோ கலியின் மகிமை.

ஐயோ என்ன பேதமை! ஸ்வதர்மத்தை விட்டுவிட்டு ஸ்வாராஜ்யத்தையும் உன்னதஸ்திதியையும் அடையமுடியுமா? அடைந்

தாலும் அது வெகு காலம் நிற்குமா? ஒருபோதும் இராதென்ப தற்கு முற்கூறப்பெற்ற ஸ்பார்ட் க்ரீஸ் முதலிய தேசஜனங்களே சாக்ஷி இவ்விதம் பிரமத்தால் ஒன்றைப்பார்த்து நாமும் அவ்வித மாவோமென்று கிளம்பிய அநேக தேசங்கள் உன்னதியடைந்தது போலாகி இப்போது பெயர்கூட இல்லாமல் அழிந்தன.

சாதாரணமான மனிதர்கள் தர்மத்தைத்தள்ளிவிட்டு தான் ஸ்வாராஜ்யமடையலாமென்று சொன்னால் நாம் அதை அசட்டை செய்யலாம். அவ்விதமில்லாமல் தேசத்தைத் தூக்கிவிடுவதில் முந்தினவன் நான் என்று எண்ணிக்கொண்டும் எண்ணச்செய்து கொண்டும் பெரியமேடைகளில் ஏறி உபன்யாசம் புரிபவர்களே இவ்விதம் கூறுவதானல் அதை விவேகமுள்ள சத்புருஷர்கள் எவ்விதம் சஹிக்கக்கூடும். ஆகையால் இப்போது தேசம் உன்னதி அடைய ஸாதனங்களின் உண்மையையும் ஸ்வரூபத்தையும் நன்கறிந்த பெரியோர்கள் அக்கார்யத்திலிறங்கவேண்டும்.

ராஜவர்க்கமும் ஓர்புறம் தன் நிலைமையினின்றும் வழுவுவதைப் பார்க்கிறோம். பிரஜைகளும் மற்றோர் புறம் தர்மவிருத்தமான ஆசாரணையில் மூழ்கித் தங்களை இன்னும் பாதாளத்தில் தள்ளிக் கொள்கிறது. நமது தர்மிஷ்டர்களதுலிக்காக்தம் மிக மேன்மையானசிகரத்திலிருந்தபோதிலும் குரங்குகளின்கடுவிலகப்பட்ட தேங்காய்கள்போல் கீழ் விழுந்து விடுமோவென்று பயத்திற்கிடமாகிறது. மகிமையோ அபாரமாய் இருந்தபோதிலும் நம் ஸகோதரர்களான பாரததேசத்தவர்கள் அதை ஆதரிக்காமலிருப்பது மிகவும் வருந்தத்தக்கதே.

இந்த நம் தேசம் நடுநடுவே கஷ்டங்களை அடைந்தபோதிலும் அவ்விருளைப் போக்கி ஞானோபதேசத்தால் மேன்மையடைந்து கொண்டிருப்பதை மேற்றிசைப் பிராசீன புருஷர்கள் Most Civilised, Most Cultured என்றெல்லாம் கொண்டாடினர். அவ்விதமே சூக்ஷ்மதரிசிகளாய் ஞானவித்தையின் கரைகண்டவர்களுமான கார்லையல் எமர்ஸன் முதலியவர்களும் விசேஷ ஞானசம்பத்துள்ள தேசத்தைப்புகழும்போது இந்தியாவை Highest Court of appeal என்றார்கள்.

இவ்விதமாகப் பெரியமகிமையை அறியாமல்தான் சொல்லுவதுதான் தேசக்ஷேமத்திற்கு வழி என்று கூறுகின்ற இக்காலத்

திய பெரியார்களின் விவேகமற்ற ஆசாரணையைப் பார்த்து அன்னிய தேசத்தவர்கள் உள்ளில் பரிகாசமே செய்வார்கள். இவ்விதம் செய்வது க்ஷேமமாகாதென்பதை திரும்பத்திரும்பக் கூறுகின்றேன்.

இப்போது நாம் ஸநாதனதர்மத்தை பிடித்துக்கொண்டுதேச விடுதலையை விரும்புகிறவர்களாய் இப்போதுள்ள மேதாவிகளையும் நம் சித்தாந்த மார்க்கத்தில் ஏற்றிவிட்டோமானால் அப்போது நம்எல்லோரது இஷ்டமும்ஸித்தித்துவிட்டதென்றேகூறிவிடலாம். அவ்விதம் செய்யமுடியவில்லையாயினும் நாங்கள் மட்டிலும்ஸ்வாராஜ்பத்தை ஸாதித்துக்கொள்ள ஒரு காலத்திலும் பின்வாங்க மாட்டோம். ஸநாதனதர்ம ஸித்தாந்தத்தை விட்டு வழுவாமல் வெகுகாலம் முன்போல் ஸ்திரமான ஸ்வாதந்திரியத்தை ஸ்தாபிக்க வேண்டியே நாங்கள் வர்ணாச்ரமஸ்வராஜ்ய சங்கத்தைஸ்தாபிக்கிறோம். ஆனால் இப்போதிய மேதாவிகள் தங்கள் ஸித்தாந்தத்தை ஜனங்களின் மனதிலிருத்த மிகவேலை செய்கின்றனர். ராஜப்ரதிநிதிகளும் வார்த்தையால் மட்டிலும் இந்திய தர்மவிஷயத்தில் நடுநிலைமை வகிப்போமென்று கூறிவிட்டு கிரியாம்சையில் தன் பிரதிக்ஞை விரோதமாய் நடத்தவே ஆரம்பிக்கிறார்கள்.

(தொடரும்)

M. N. சுப்பிரமணியசாஸ்திரி.

---

## சிராத்தத்தில் சிலரது ஆசங்கை.

17—7—30வயுள்ள ஆர்யதர்மத்தில் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கும் மேற்கண்ட ஆசங்கைகளைக் கண்டேன். யான் வெளியிட்டிருக்கும் சிராத்தம்—ஓர் விமர்சம் என்னும் நூலில் மேற்கண்ட சில ஆசங்கைகளுக்குத் தகுந்த ஸமாதானங்களையும் ஏனைய விஷயங்களையும் காணலாம். அந்நூலில் காணாத பல ஆசங்கைகளின் ஸமாதானங்களையும் வெளிப்படுத்த முயலுகிறேன். மேற்குறித்த புஸ்தகம் ஒன்று தபாற்செலவுள்பட 0—5—0 பெறும் என்பதை நமது வாசகர்களுக்குத்தெரிவித்துக் கொள்கிறேன்.

டவுன்ஹைஸ்கூல்,
கும்பகோணம்.

M. ராமராவ்.

ஸ்ரீ குருப்யோ நம:

# சிராத்தம்.

ஸ்ரீ மஹாபலேச்வா சர்மாவால் செய்யப்பட்ட அனேக ஆக்ஷேபங்களுக்குள் சிராத்தத்தைப்பற்றிய முதலாவது ஆக்ஷேபத்துக்கு ஸமாதானமாவது பின்வருமாறு:- அவருடைய ஆக்ஷேபங்களை வாசித்துப் பார்க்கும்பொழுதே அவை ஸாரமற்றவை என்றும், அவைகளுக்கு ஸமாதானங் கூறுவது அனுவசியமென்றும் ஆரியச்சிறுவர்களுக்கும் புலப்படுமென்றாலும், தாம் எழுதியிருக்கும் ஆக்ஷேபங்கள் யாவும் ஸரியானவையேயாகுமென்று விபரீத எண்ணங்கொண்டிருக்கும் சர்மாவின் மனம் ஆர்யவைதிக புராதன புண்யமதத்தினின்று நழுவாமலிருப்பதற்கும், மேன் மேலும் அபிவிருத்திமார்க்கத்தைத் தேடிக்கொள்வதற்கும் நற்புத்திபுகட்டுவது மிகவுமவசியமானதுபற்றி சர்மாவின் யுக்திவாதத்திற்கும் பதில் கூறுவாம்.

வேதத்தைப் பிரமாணமாக அவலம்பித்து நித்தியமாயும் நிர்தோஷமாயும் பிரகாசித்துவரும் வர்ணாச்ரம தர்மமென்னும் நமது மதத்தைப் பிறருக்காகவாவது தூஷணம் செய்வது மஹாபாபமாகும், பிறருக்காகத்திருட்டுத்தொழிலுள்ளவனையும் அரசாங்கத்தார் தண்டனைக்குள்படுத்துவதில்லையா ?

களங்கமற்ற வைதிக வர்ணாச்ரமதர்ம மதத்தில் யுக்திவாதத்தால் தோஷங்கூறுபவருக்கு தோஷம் அணுவளவுமில்லாத மதம் எது என்று அபிப்பிராயமோ தெரியவில்லை. உலகிலுள்ள ஸகல மதங்களிலும் ஏதாவதொரு தோஷம் ஸம்பவித்தே தீரும் என்றல்லவோ

**सर्वारंभो हि दोषेण धूमेनाग्निरिवावृतः ।**

என்ற வசனத்தால் ஸ்ரீஆசாரியாள் நிரூபித்துள்ளார்.

ஆகவே, தோஷமுள்ளதோ அல்லது தோஷமற்றதோ எவ்விதமாயினும் அவரவர்களின் குலபரம்பரையாக ஆசாரணையிலிருந்து வரும் மதத்தை அவரவர்கள் சந்நிக்கிசைந்தவாறு அனுஷ்டிக்கும் பக்ஷத்தில், அவரவர்களுக்கு பகவான் க்ஷேமத்தை அளிக்கின்றார்,

நமது வம்சபரம்பரையாக நமக்குக்கிடைத்திருக்கும் வைதிக மதத்தை தூஷித்துப் பிறருக்குச்சொந்தமாய் இருக்கும் மதத்தை ஆதரித்து அனுஷ்டிப்பதால் நாம் க்ஷேமமாக வாழமுடியாது.

**"परधर्मो भयावह:"** என்றார் கீதாசாரியாள். மனிதரொவ்வொருவர்களுக்கும் தனித்தனி ஸ்வபாவமமைந்திருப்பது போல் மனிதஸமூஹமாகிய தேசங்களுக்கும் தனித்தனிஸ்வபாவமுண்டு. ஆகவே ஒருதேசத்தின் தர்மம் மற்றொருதேசத்துக்குப்பொருந்தமாட்டாது. அன்றியும் நமது தேசத்து தர்மத்தை நாம் விடுவவதாக எத்தனித்தாலும் விட்டுவிட முடியாது. அது நித்யமன்றோ? பிரளயகாலத்திலும் நமது ஸூக்ஷ்மசரீரத்தில் ஸூக்ஷ்மமாக எஞ்சிநின்றே தீரும்.

நாம் செய்துவரும் காரியங்களெல்லாம் யுக்தியுக்தமென்றே நிச்சயமாய்ச் சொல்லமுடியுமா ? யுக்திப் பிரமாணத்தாலேயே செய்யத்தகுந்த காரியங்களின்னதென்றும், செய்யத்தகாத காரியங்களின்னவைஎன்றும் தீர்மானித்துவிடமுடியுமா? நமது அற்பபுத்தி யுக்திக்கெட்டாத விஷயங்களும் எவ்வளவோயிருக்கலாமன்றோ?யுக்தியானது கெடுதலை நல்லதாகவும், நல்லதை கெடுதலாகவும் அறிவிக்கலாமன்றோ ?

அப்படியே சிராத்தம் முதலிய வைதிகதர்ம விஷயங்களை யுக்தியுக்தங்களில்லை என்று ஸம்சயித்துவரும் சர்மாவுக்கு யுக்தி மூலமாகவே பதிலளிக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஆஸ்திகர்களுக்கில்லை. யுக்திவாதத்தால் ஆக்ஷேபம செய்பவனுக்கும் வேதம் முதலியப் பிரமாணமூலமாகவே தான் ஸமாதானம கூறவேண்டுமேயொழிய வேறு யுக்தியைத் தேடவேகூடாது. வேதசாஸ்திரங்களை பிரமாணமாக நம்பும்படிசெய்வதும் நமது கடமையாகுமன்றோ ? உபநயனங்கூட ஆகாமலிருப்பவனுக்கு வாஜபேயம் முதலிய மகாயாகங்களால் என்ன பயன் என்பதுபோல் வேதசாஸ்திரங்களைப்பிரமாணங்களாக நம்பாதவனுக்கு தர்மோபதேசத்தால் யாது பயன் ?

ஆகவே யுக்திவாதத்திற்கு யுக்திவாதத்தால் பதிலளிப்பது அனுசிதமேயாகும். மனு முதலிய மஹான்கள் யுக்திவாதத்திற்கும் யுக்திவாதம் பேசும் நாஸ்திகனுக்குமிடங்கொடுக்கலாகாது.

அத்தகைய யுக்திவாதிகளை தேசத்தைவிட்டு பஹிஷ்கரிக்கவும் வேண்டுமென்று யுக்திவாதத்தை அடியோடு வெறுக்கின்றார்கள்.

அதாவது—

योऽवमन्येत ते तूभे हेतुशास्त्राश्रयान्नरः ।
स साधुभिर्बहिष्कार्यः नास्तिको वेदनिन्दकः ॥
श्रुतिं पश्यन्ति मुनयः स्मरन्ति च तथा स्मृतिम् ।
तस्मात्प्रमाणमुभयं प्रमाणैः प्रमितं भुवि ॥
पुराणं मानवो धर्मः सांगो वेदश्चिकित्सिकम् ।
आज्ञासिद्धानि चत्वारि न हन्तव्यानि हेतुभिः ॥

என்றவாறு.

இவ்வாறே சுருதிஸ்மிருதிகளையும் வர்ணாச்ரமதர்மவ்யவஸ்தைகளையும் நிந்தைசெய்வது தற்கொலைசெய்துகொள்வதற்குச்சமானமென்று ஸ்ரீ வஸிஷ்டபகவானும்

अप्रामाण्यं च वेदानां आर्षाणां चैव कुत्सनम् ।
अव्यवस्था च सर्वत्र गतन्नाशनमात्मनः ॥

என்ற வசனத்தால் தெரிவிக்கின்றார். ஆகையால் யுக்திவாதத்தால் வைதிகதர்மங்களைத் தூஷணம் புரிவது அறியாமையேயாகும்.

சார்வாகன்முதலிய நாஸ்திகர்களால் எடுத்துக்காட்டப்பட்ட யுக்திவாதத்தைக்காட்டிலும் புதிய யுக்திவாதம் யாதொன்றையும் இவர் எடுத்துக்காட்டவில்லை. இவர் சிலவிடங்களில் முன்னுக்குப் பின் முறணாகவும் பேசியிருக்கின்றார். இதனாலேயே இவருக்கு வைதிகமதத்தினியல்பு தெரியமாட்டாதென்பது நன்கு விளங்குகின்றது.

இனி இவ்விஷயத்தை விமர்சம்செய்யத்தொடங்குவாம்.

சிராத்தமென்பது சிரத்தையுடன் பிதிருதேவதைகளுக்கு அன்னம் முதலிய வஸ்துக்களை பிராமணர்கள்மூலமாக அர்ப்பணம் பண்ணுவதுதான். அது பார்வணமென்றும் ஏகோத்திஷ்டமென்றும் இருவிதம். மூன்றுபேர்களைக்குறித்து செய்யப்படுவது பார்வணமாகும். ஒரு புருஷனைக் குறித்து செய்யப்படுவது ஏகோத்திஷ்டமாகும். இவ்விரண்டும் நித்தியம், நைமித்திகம், காம்யமான மூன்றுவிதம். இவற்றில் பிரதிதினத்திலும் அமாவாஸ்யை

அஷ்டகை முதலிய காலங்களிலும் செய்யப்படும் சிராத்தம் நித்ய மெனப்படும். புத்திரனினுத்பத்தி முதலிய விசேஷகாலங்களில் செய்யப்படும்சிராத்தம் நைமித்திகமென்று சொல்லப்படும். ஸ்வர்க்கம் முதலிய பலன்களைக் குறித்து கிருத்திகைமுதலிய நக்ஷத்திரத் தன்றையதினத்திலும் தமக்கிஷ்டமுள்ள திதிகளிலும் செய்யப் படுவது காம்யசிராத்தமாகும். இது நித்தியசிராத்தம், பார்வணம் விருத்தி சிராத்தம், ஏகோத்திஷ்டம்,ஸபிண்டீகரணமென்று ஐந்து விதமாகவும் விபாகம் பண்ணப்பட்டிருக்கிறது.

இப்படி விபாகம் பண்ணப்பட்டிருக்கும் சிராத்தகர்மாவைச் செய்யாமல் விடலாகாது. விட்டுவிட்டால் அனேக ஜன்மங்களில் சண்டாளனுகஜனனமெடுப்பதுமல்லாமல் பதிதனுகவும்ஆகிவிடுவா னென்று ஸ்மிருதிகள் உத்கோஷிக்கின்றன.

मृताहं समतिक्रम्य चण्डालः कोटिजन्मसु ।
अतो विप्रैर्न तत्त्याज्यं प्राणैः कण्ठगतैरपि ॥
मातापितृभ्यां सततं वर्षे वर्षे मृतेऽहनि ।
स याति नरकं घोरं श्राद्धं न कुरुते तु यः ॥

என்பதாதி வசனங்களால் மனுவும்

दद्यादहरहः श्राद्धं अन्नाद्येनोदकेन वा ।
पयोमूलफलैर्वापि पितृभ्यः प्रीतिमक्षयाम् ॥

என்ற வசனத்தால் சிராத்தம் மிகவும் முக்கியமானது என்பதை அறிவிக்கின்றூர்.

ஆதித்யபுராணத்தில் பிதிருதேவதைகள் இல்லையென்று சிராத்தத்தைப் பரித்யாகம் பண்ணினவர்களுடைய ரத்தத்தை பிதிருக்கள் உறுஞ்சிவிடுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

न सन्ति पितरश्चेति कृत्वा मनसि यो नरः ।
श्राद्धं न कुरुते तत्र तस्य रक्तं पिबन्ति ते ॥

என்பதால்

न निर्वपति यः श्राद्धं प्रमीतपितृको द्विजः ।
इन्दुक्षये मासि मासि प्रायश्चित्तीयते तु सः ॥

என்று. ஆகையால் அறியாமலும் சிராத்தகர்மாவை விட்டுவிடக் கூடாதென்று நிச்சயமாய்ப் புலப்படுகின்றது. அறிந்துவிடுகிற வனுக்குப் பிராயச்சித்தமே கிடையாது.

சிராத்தத்தை கர்த்தாவும் போக்தாவுமிரண்டுபேர்களும் சேர்ந்து முடிக்கவேண்டுமாதலால் கர்த்தாவுக்கு சிராத்தம் நித்யமாகுமேயொழிய போக்தாவுக்கு நித்தியமில்லை, காம்யந்தானும். சிராத்தபோஜனதக்ஷிணாதிகளில் ஆசையிருந்தாலும் பரோபகார புத்தியிருந்தாலும் போக்தாவாக ஒப்புக்கொள்ளலாம். ஆசையும் பரோபகாரபுத்தியும் இல்லாவிட்டால் போக்தாவாக இல்லாமலுமிருக்கலாம். சிராத்தத்தில் போக்தாவாக அங்கீகரிக்காதவர்களுக்குத் தோஷமுண்டென்று ஓரிடத்திலுங் கூறவில்லையல்லவா? ஆகவே பிராமணர்களில்லாமல் சிராத்தத்தையனுஷ்டிக்க எப்படி முடியும்? பிராமணர்களை தாருக்காரர்களாகக் கருதுவது மூடத்தனமாகும். சிராத்தத்தில் நியமனம் செய்யவேண்டிய பிராம்ணர்களின் ஸ்வரூபத்தையும் லக்ஷணத்தையும் கவனிக்கும்போது தாருக்காரர்களாக மனதால் நினைப்பதற்குமிடமில்லை.

கலிகாலவைபவத்தால் அனேகவிதமாக தர்மகாரியங்களெல்லாம் மாறிக்கொண்டுவரும்போது தற்போது ஆசரணையிலிருந்துவரும் கர்மாநுஷ்டானப்பிரகாரத்தை புராதனமாக நினைத்துக்கொண்டு அதைத்தூஷிப்பது உசிதமாகுமா? சர்மாசிராத்தப்பிராம்மணர்களைத் தாருக்காரர்களாக நினைத்து எழுதுவதுபோல் சாஸ்திரங்களும் அவ்வண்ணமேகருதி எழுதவேண்டுமென்ற நிர்ப்பந்தமுண்டோ? சாஸ்திரங்களைச் சிறிதும் பராமர்சம் பண்ணாமலும், பெரியோர்களுடைய வசனங்களில் நம்பிக்கை வைக்காமலும் இப்படி தாறுமாறாகக் கேள்விகேட்பது மிகவும் அஸங்கதமேயாகும். சிராத்தப் பிராம்மணர்களின் ஸ்வரூபத்தையறிவிக்கும் அடியில் கண்ட வசனத்தை சற்று சர்மா உற்றுநோக்கவேண்டும்.

कर्मनिष्ठाः तपोनिष्ठाः पञ्चाग्निर्ब्रह्मचारिणः ।
पितृमातृपराश्चैव ब्राह्मणाः श्राद्धसंपदः ॥

என்று யாக்ஞவல்க்யர் "தபஸ்விகளாகவும் கர்மநிஷ்டர்களாகவும் பெற்றோர்களைப் பூஜிக்கின்றவர்களுமாகிய சுரோத்திரிய பிராம்மணர்களை சிராத்தத்தில் வரணம்செய்தால்தான் சிராத்தம் அக்ஷய பலனைத் தருமென்று கூறுகின்றார். இவ்வசனத்தைப்போல் சிராத்தப்பிராம்மணஸ்வரூபத்தையறிவிக்கும் ஸ்மிருதிவசனங்கள் பலவுண்டு. இப்படி சாஸ்திரங்களில் கூறியவண்ணம் பிராம்மணர்கள் தற்காலத்தில் கிடைப்பதரிது. இக்காரணத்தைக் கொண்டு சிராத்தப்பிராம்மணர்களைத் தாருக்காரர்களாகக் கூறுவது ஸரியா?

நிற்க, சர்மாவானவர் ஆரம்பத்தில் சிராத்தசப்தார்த்தத்தை வியாகரணசாஸ்திரபூர்வகமாக நிர்ணயித்துவிட்டு பிறகு சிராத்தப் பிராம்மணர்களை தாருக்காரர்களாக நிரூபணம் பண்ணுவது பொருத்தமுடையதாகவிருக்கவில்லையே?

வியாகரணசாஸ்திரப்பிரகாரம் ஏற்பட்டுள்ளசிராத்தசப்தார்த்தத்திற்கும் சிராத்தப்பிராம்மணநிந்தைக்கும் என்ன ஸம்பந்தம்? வியாகரணமூலமாக ஸித்தித்த சிராத்தசப்தார்த்தத்தைஆக்ஷேபிப்பவர் யார்? நாம் சிரத்தையுடன் சிராத்தத்தை யனுஷ்டிக்காததால் சிராத்தகர்மாவிற்கே தோஷம்ஸம்பவித்துவிடும்போலும்! சிரத்தையுடன் அனுஷ்டித்து க்ஷேமத்தையடைவதற்கு வழி தேடுவது தான் ஆஸ்திகர்களுக்கு அழகாகும். பொதுவாக சிராத்தம் முதலிய வைதிககார்யங்களில் தோஷமிருப்பதாகக் கூறுவது தம் புத்திதோஷத்தாலேயேயொழிய ஸ்வபாவத்தில் அவைகளில் சிறிதும் தோஷம் ஸம்பவிக்கமாட்டாது.

பிறர் சிராத்தத்தையும் மற்றுமுள்ள வைதிககார்யங்களையும் நிந்தனைபுரிந்தால் அதற்கு "நமது பெரியோர்களால் ஆசாரணை செய்துவந்த காரியங்களை எவ்விதமாயினும் நிந்திக்கலாகாது. நாமுமப்படியே தான் அனுஷ்டிக்கவேண்டும்" என்று சர்மாவிற்கு ஸமாதானங்கூற என் மனம் வரவில்லையோ தெரியவில்லை. இவ்விதம் ஸமாதானங்கூறுவது திருப்தியற்ற ஸமாதானமென்று சர்மாவின் அபிப்பிராயம்போலும். மனுவோ இவ்வித ஸமாதானத்தில்தான் பூர்ணதிருப்தியை வெளிக்காட்டுகின்றார்.

येनास्य पितरो याताः येन याताः पितामहाः ।
तेन यायात्सतां मार्गं तेन गच्छन्नरिष्यति ॥

என்று. ஆகையால் வடக்கத்திப்பிராம்மணனுக்கு ஸுலபமாகிய ஸமாதானத்தை சர்மா அறிவிக்காமலிருந்ததுமன்றி அவருடைய அபிப்பிராயமென்று இவர் வர்ணாச்ரமதர்மங்களை ஸ்பஷ்டமாயும் கடினமாயும் தத்வம் தெரியாமல் நிந்திப்பது பிறருடைய அபிப்பிராயத்தையனுஸரித்து தற்கொலை செய்வதுகொள்வதற்கொப்பாகும். தன்னுடைய மூடத்தனத்தையும் வெளிக்காட்டினதாக முடியும்.

ஆகையால் சிராத்தப்பிராம்மணர்கள் தாருக்காரர்களல்ல.

சிராத்தத்திற்கு யோக்யமாகியபிராம்மணர்களில்லையென்றும் அதை விட்டுவிடக்கூடாது. தர்மசாஸ்திரங்களில் "உத்தமப்பிராமணர்கள் சிராத்தத்திற்கு கிடைக்காதபக்ஷத்தில் பிராம்மணஜாதியில் பிறந்தவர்களென்று தம்மை சொல்லிக்கொள்ளும் ஜாதிப்பிராமணர்களைக்கொண்டாவது சிராத்தத்தை சிரத்தையுடன் நடத்தித்தான் வேண்டும்" என்று கூறப்பட்டிருக்கின்றது. எக்காரியத்தைக்கொண்டும் சிராத்தம் விடக்கூடிய காரியமில்லையென்றும் மகரிஷிகளின் அபிப்பிராயமாகும்.

காலாதீனர்களாகவிருக்கும் பிராம்மணர்களையும் நிந்திப்பது ஸரியல்ல. பிராம்மணர்களுடைய புத்தியும் கலிகாலமஹிமையால் மாறிவிடலாமன்றோ?

कालश्चालयति प्रायः पण्डितान्पामरानपि ।

என்ற திருவாக்கின்படி ஸகல ஜனங்களையும் காலமானது மாற்றிக்கொண்டுவருகின்றதன்றோ? ஏதோ கூடியவரையில் அதிக தோஷமில்லாத பிராம்மணர்களைக்கொண்டாவது சிராத்தத்தை விடாமல் அனுஷ்டிப்பதுதான் காலானுகுணமாகும். இவ்விஷயத்தையே பராசரஸ்மிருதியும்

युगे युगे च ये धर्मा स्तत्र तत्र च ये द्विजाः ।
तेषां निन्दा न कर्तव्या युगरूपा हि तेद्विजाः ॥

என்பதாதி சுலோகத்தால் அறிவிக்கின்றது. தவிற, சர்மா—"சிராத்தம் ஜீவனைவிட்டுப்போன தந்தை தாயார் பந்துக்களுக்கு எப்படி திருப்தி செய்யக்கூடுமென்றும், அப்படியே செய்வோமானால் மத்ஸ்யபுராணத்தில் 17வது அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறபடி ஏன் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவில்லை. மேலும் அந்தவிதமாக மத்ஸ்யம், மாம்ஸம், மதுபானம் முதலியவைகளைக்கொண்டு சிராத்தம் செய்வதை வேதம் அங்கீகரிக்கவில்லையே. அதுவுமல்லாமல் "अहिंसापरमोधर्मः" என்னும் சிக்ஷையை எப்படி பரிபாலிக்கமுடியும். ஒரு விதத்திலாவது மிருத்யுவான பிதாக்களுக்கு பிராம்மணர்களுக்கு போஜனம் செய்வித்து தக்ஷிணையைக் கொடுப்பது நிஷ்பலமேயாகுமென்றும்" எழுதுகிறார்.

இதுவும் நமது சாஸ்திரங்களில் உண்மையை அறியத்தக்க ஆராய்ச்சியைச் சிறிதும் செய்யாத காரணத்தாலேயேதான் என்றுணரவேண்டும்.

இங்கு நம்மவர்களால் செய்யப்படும் சிராத்தம் முதலியவை களால் பிதிருலோக வாஸிகளாகிய வஸு, ருத்திர, ஆதித்யர் முதலிய பிதிருகணங்களே தான் ஆராதிக்கப்படுகின்றனவேயன்றி லோகாந்தரத்தையோ அடைந்த தாய் தந்தையர்முதலிய நம்முன்னோர்கள் மட்டிலுமல்ல. வஸ்வாதிபிதிருக்களைக் குறித்துச் சிராத்தத்தை ச்செய்தபோதிலும்அவர்கள் மூலமாக நமது தாய்தந்தையர் முதலிய முன்னோர்கள் ஷெ சிராத்தாதிகளைப்பெற்று திருப்தியையடைகின்றனர். நாம் செய்யும் சிராத்தாதிகளை நம் முன்னோர்களே நேரில் வந்து பெற்றுக்கொள்வதாக வைதிகமதசித்தாந்தமில்லையே? பாதந்திரர்களாக இருக்குமிறந்த நம் முன்னோர்களுக்கு அப்படியே நேரில் வந்து சிராத்தாதிகளைப் பெற்றுக்கொள்வது இயலாதல்லவா? ஆகவே, நாம் செய்யும் சிராத்தம் முதலியவற்றை நேரில் பெற்றுக்கொள்வோர் "பிதிருக்கள்" என்ற ஒருவகைத்தேவகணங்களென்பது தான் நமது தர்ம சாஸ்திரங்களினின்றும் வெளியாகுமுண்மையாகும். அவர்கள் லோகாந்தரத்தையடைந்துள்ள நம்முன்னோருக்கு அந்த சிராத்தத்தின் பயனை சேர்ப்பிக்கின்றனர் என்பதும் அறியத்தக்கது. இறந்தவர்கள் ஸ்வர்க்கத்திலிருந்தாலும் சரி, நரகத்திலிருந்தாலும் சரி. பிதிருக்கள் அவர்களுக்கு அபிமானிகளானபடியால் ஸ்வர்க்க நரகங்களிலுள்ள நம் முன்னோருக்கு சிராத்தாதிகளைச் சேர்ப்பிப்பதில் ஆக்ஷேபமில்லை. அல்லது நம் முன்னோர் ஜன்மாந்தரத்தைப் பெற்றிருந்தாலும் சிராத்தம் செய்யப்படும் தினத்தன்று விசேஷ திருப்தியையடைந்துவிடுவார்கள். எத்தகைய ஜாதியில் பிறந்தாலும் அந்தந்த ஜாதிக்குறிய ஆகாரமாக அது மாறி திருப்தியை உண்டுபண்ணிவிடும். மாடாயிருந்தால் இளம்புல்லாகவும் மனிதனுயிருந்தால் நல்ல அன்னபானுதிகளாகவும், மாறி திருப்தியை விளைவிக்கின்றது. இனி எவருக்குச் சிராத்தம் செய்கின்றோமோ? அவர் முக்தியையடைந்தவர்களாயிருந்தால்சிராத்தப்பயன்யாரைச் சேருமென்றால்,பிதிருதேவர்கள் அந்த சிராத்தத்தால் ஆராதிக்கப்பட்டு அதன் கர்த்தாவாகிய நம்மையே விசேஷமாக அனுக்ரஹிக்கின்றனர். ஆதலின் அதன் பயன் நம்மையே அடைகின்றது. என்பது ரஹஸ்யம். காசி முதலியவிடங்களிலுள்ள ஒருவருக்கு இங்கிருந்து ரூபாயை மணியார்டர் மூலமாக அனுப்பினோமானால் பெற்றுக்கொள்பவர் அவ்விடத்திலில்லாவிட்டால் நம்மிடமே

திரும்பி வருதல்போல முக்திபெற்றவர்களைக்குறித்து செய்யப்படும் சிராத்தத்தின் பயன் கர்த்தாவாகிய நம்மையே வந்தடைதல் உசிதந்தானென்க. இவ்விஷயங்களையெல்லாம் ஸ்ரீயாக்ஞவல்க்யர் இரண்டுசுலோகங்களால் ஸங்கிரஹமாய் அறிவித்திருக்கின்றார்.

அதாவது—

वसुरुद्रा दितिसुता पितरः श्राद्धदेवताः ॥
प्रीणयन्ति मनुष्याणां पितॄन्श्राद्धेन तर्पिताः ॥
आयुः प्रजां धनं विद्यां स्वर्गं मोक्षं सुखानि च ।
प्रयच्छन्ति तथा राज्यं प्रीता नॄणां पितामहाः ॥

ஆகையால், இறந்தவர்களைக் குறித்துச் சிராத்தம் செய்வது தகாதென்று சங்கித்தலுக்குக் காரணம் ஆராய்ச்சிக் குறைவும் ஸத்ஸஹவாஸமின்மையும் கலியின் கொடுமையுமேயாம் என்றுணர்க. நிற்க, மதுமாம்ஸாதிகளைக்கொண்டு சிராத்தத்தை கலிகாலத்தில் செய்யக்கூடாதென்று கலியுகநிஷித்ததர்மங்களை நிரூபிக்குமிடத்தில் கூறப்பட்டிருப்பதால், மது, மத்ஸ்யம், மாம்ஸம் இவைகளைக் கொண்டு சிராத்தம் செய்யக்கூடாதா ? என்றப் பிரச்னத்துக்கும் அவகாசமில்லை. மத்ஸ்யபுராணவசனங்களுக்குங்கூட கிருதம் முதலிய யுகங்களில் செய்யப்படும் சிராத்தத்தைத்தான் அவ்விதம் செய்யவேண்டுமென்று தான் அர்த்தங் கொள்ளல் வேண்டும். அல்லது மது மாம்ஸாதிகளைக்கொண்டு சிராத்தம் செய்யவேண்டுமென்பது க்ஷத்திரிய வைசியர்களுக்குத்தான்; பிராம்மணர்களுக்கல்ல. பிராம்மணர்கள் காய், கிழங்கு, பழம் முதலிய முன்யன்னத்தைக்கொண்டுதான் சிராத்தம் செய்யவேண்டும். இவ்விதவியவஸ்தையை, புலஸ்தியர் அறிவித்திருக்கின்றார்.

मुन्यन्नं ब्राह्मणस्योक्तं मांसं क्षत्रियवैश्ययोः ।
मधुप्रदानं शूद्रस्य सर्वेषां चाविरोधि यत् ॥

என்று. இதன் அர்த்தமாவது—

பிராம்மணர்கள் நீவாரம், காய், கிழங்கு முதலிய வஸ்துக்களைப் பிரதானமாய் வைத்து சிராத்தம் செய்யவேண்டும். க்ஷத்திரியவைசியர் மாம்ஸத்தையும், சூத்திரர்கள் மதுவையும், பிரதானமாகக்கொண்டு சிராத்தம் நடத்தவேண்டும். சிராத்தத்தில் சேர்க்கக்கூடிய மற்ற வஸ்துக்களை யாவரும் கிரஹித்துக்கொள்ளலாம்.

என்று மாம்ஸத்தைக்கொண்டுசிராத்தம் செய்யவேண்டியவர்களாகிய க்ஷத்திரிய வைசியர்களை நாம் தெறிந்துகொள்வது தற்போது முடியாதபடியால்மாம்ஸத்தால் சிராத்தம்செய்வது நின்றுவிடவே யாருக்கும் பொதுவாக தர்மசாஸ்திரங்களில் சிராத்தத்தில் சேர்த்துக்கொள்ளும்படி சொல்லப்பட்ட வஸ்துக்களால் சிராத்தகர்மானுஷ்டானம் யாவராலும் ஆதரிக்கப்பட்டது. இக்காரணத்தாலேயேதான் கலியுகத்தில் மாம்ஸத்தால் சிராத்தஞ் செய்யலாகாது என்று பாராசரமாதவீயத்திலும் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றது.

ऊढायाः पुनरुद्वाहं ज्येष्ठांशं गोवधं तथा ।
कलौ पञ्च न कुर्वीत भ्रातृजायां कमण्डलुम् ॥

என்று "गोवधं" என்பதற்கு "வரன், அதிதி, பிதிருக்கள் இவர்களுக்காகச் செய்யப்படும் பசுஹிம்ஸை" என்று அர்த்தமாகும். இவ்வாறு அர்த்தங்கூறவேண்டுமென்ற விஷயமானது,

वरातिथिपितृभ्यश्च पशूपाकरणक्रिया ।
निषिद्धा सर्ववर्णानां सर्वदा श्राद्धकर्मणि ॥

தர்மசாஸ்திரஸாராநிதிக்கிரந்தவசனத்தால்ஏற்படுகின்றது. ஆகவே எக்காலத்திலும் எல்லாருங்கூட மாம்ஸத்தையே பிரதானமாக வைத்துக்கொள்ளக்கூடாதென்று விதிக்கின்றது.

மாம்ஸத்தால் சிராத்தம் செய்யக்கூடாதென்ற ஸ்மிருதிகளை ஆதாரமாக அவலம்பித்துக்கொண்டு தான் மாம்ஸத்தால் சிராத்தானுஷ்டானம் நமது நாட்டில் நின்றுவிட்டதேயன்றி, அந்தவிதமாகச் செய்ய வேதம் அங்கிகரிக்கவில்லை என்ற காரணத்தால் அல்ல. வேதங்களிலும் வரனுக்கும், அதிதிகளுக்கும், பிதிருக்களுக்கும் மாம்ஸத்தை உபயோகிக்கலாம் என்று ஸ்பஷ்டமாய் காணப்படுகின்றதல்லவா? ஆகவே மதுமாம்ஸம், மத்ஸ்யம் இவைகளைக்கொண்டு சிராத்தம் செய்வதுபாபமென்று வேதங்களில் சொல்லியிருப்பதாகக் கூறுவதுதான் பெரும் பாபகாரியமாகும்.

வேதத்தில் அந்தவிதமாகச்செய்யலாமென்று சொல்லியிருக்குமேயானால் அவ்விதம் செய்வதில் என்ன ஆக்ஷேபமென்று சங்கிப்பதும் ஸரியல்ல.

அவ்விதம் அனுஷ்டிக்கவேண்டியவர்களாகிய அதிகாரிகள் அடியோடு அற்றுப்போனபடியாலவைகளை அவ்விதமனுஷ்டிக்க

அஸாத்யமாயிருப்பதை அனுசரித்து ஏற்பட்டுள்ள தர்மசாஸ்திர நிஷேதவசனங்களால் வேதத்தில் சொன்னபிரகாரமனுஷ்டிக்க முடியவில்லை.

வேதங்களில் ஜீவஹிம்ஸையே செய்யக்கூடாதென்று நிஷேதிக்கவில்லை. யாகம் முதலிய புண்யகாரியங்களில் ஜீவஹிம்ஸை சிறிதும் தோஷமுள்ளதல்ல என்று வேதஸ்மிருதிகளின் அபிப்பிராயமன்றோ? விசாரித்துப்பார்த்தால், பசுக்களைப்பகவான் ஸிருஷ்டித்ததற்கு யாகம் முதலிய விஷயங்களில் விநியோகம் பண்ணுவது தான் முக்கியப் பிரயோஜனம். போக்தர், போக்யம் இவ்விருவிதமான இப்பிரபஞ்சத்தில் போக்ய வஸ்துவை ஹிம்ஸிக்காமல் எவன் ஜீவிப்பான். நமக்குப் புலப்படாமலே நம்மிடம் தினம்தோறும் பல ஜீவஹிம்சைகள் ஸம்பந்தித்து வருகின்றனவே. ஆகாரத்துக்காக நெல் முதலிய தான்யவகைகளை வயலிலிருந்து அறுத்துக் கொண்டு வருவது ஜீவஹிம்ஸையன்றோ நடக்கும்போது ஈ எறும்பு முதலிய எண்ணிறந்த ஜீவராசிகள் உயிரை விடுவது பிரத்தியக்ஷஜீவஹிம்ஸையல்லவா? இப்படியே காய் கனி வர்க்கங்களையும், விருக்ஷம், கொடி, செடி முதலியவற்றிலிருந்து எடுத்துக்கொண்டுவந்து கரி முதலிய பாகவிசேஷஞ்செய்து சுகமாய் சாப்பிடுவதும் ஜீவஹிம்ஸை தோஷமில்லைபோலும்? இவ்வாறே அம்மியில் மிளகாய் முதலியவைகளை அறைக்கும்போதும், அடுப்புமுட்டுங்காலத்திலும்,பலஜீவர்கள்நசிப்பது தோஷமில்லையா?

தமது சரீரத்தை புஷ்டியாக வைத்துக்கொள்வதற்காக தற்காலத்திய மிலேச்சர்களால் வெகு புனிதமென்றும், ஈசுவராதிகளை அதனிடம் பூஜிக்கலாமென்றும், வெகு ஸாதுவானதென்றும் போற்றப்படும் பசுமாடு முதலிய ஜீவஜந்துக்கள் கணக்கில்லாமல் கொல்லப்படுவது ஜீவஹிம்ஸையன்றோ? இவ்விதமிருக்க, சிராத்தம், அதிதி முதலிய புண்யகாரியங்களில் சாஸ்திரப்பிரமாணமூலமாக தோஷமற்றதாக விதிக்கப்படும் ஜீவஹிம்ஸை மட்டிலும் தோஷம் என்று கூறுவது அழகாகுமா? "अहिंसा परमो धर्मः" என்ற வாக்கியத்தால் வெளியாகும் அஹிம்ஸா விருதத்துக்கும் யாகம் முதலியவிடங்களைத்தவிற மற்றவிடங்களில் நம்மால் புத்திபூர்வகமாக, செய்யப்படும் ஜீவஹிம்ஸை தான் செய்யக்கூடாது, வைதிகஹிம்ஸையை செய்வதில் தோஷமில்லை என்று தான் அர்த்

தமாகும். ஆதலால் உலகில் ஜீவஹிம்ஸை செய்யாமல் மனிதன் வசிக்கவே முடியாதென்று உலகானுபவ மூலமாகவும் சாஸ்திர வாயிலாகவும், ஸித்தித்துவிடுமேயானல் அப்படிச் செய்யப்படும் ஜீவஹிம்ஸைகளனைத்தையும் நாம் எப்படி செய்யாமல் நிறுத்திவிட முடியும். நாள்தோறும் நம் நாடெங்கும் நடைபெற்றுவரும் பசு முதலிய புண்யஜீவன்களை சித்திரவதை செய்வது வெகு உசிதம். யாகம் முதலிய காரியங்களில் வேதப்பிரமாணத்தையவலம்பித்து பிராம்மணர்களால் ஏதோ சிலவிடங்களில் செய்யப்படும் சாஸ்திரீயஜீவஹிம்ஸை உசிதமன்றோ? ஜீவஹிம்ஸையே செய்யக்கூடாதென்று கூறுபவர்கள் முதலில் தற்காலத்தில் ஒவ்வொரு நகரத்திலும், கிராமங்களிலும் ஆகாரத்திற்காக ஒவ்வொரு கசாப்புக்கடைகளில் நடத்தப்படும் கடோரமாக நடத்தப்படும் ஜீவவதையை நிறுத்துவதில் பிரயத்னம் ஏனெடுத்துக் கொள்ளவில்லையோ? வைதிகர்களால் யாகம் முதலிய விஷயங்களில் செய்யப்படும் ஜீவஹிம்ஸையை மட்டிலும் நிந்தித்து நிறுத்துவதற்கு பெருமுயற்சி எதற்காக நடைபெறவேண்டும். அஹிம்ஸாவாதத்தைப் பிரதானமாக அவலம்பித்திருக்கும் ஜைன பௌத்த மதங்களிலும் கூட தினந்தோறும் தெரியாமல் ஜீவராசிகளிடம் ஸம்பந்திக்கும் ஹிம்ஸாதோஷத்தை விலக்கிக்கொள்வதற்காக "அர்ஹத்" "புத்தர்" முதலிய தம் தம் மதாசாரியாளை ஸ்மரித்துக்கொள்ளவேண்டுமென்ற ரஹஸ்யப் பிராயச்சித்தவிதானத்தாலும், ஜீவஹிம்ஸை எல்லோருக்கும் அவசியம் ஸம்பவித்தே தீருமென்ற விஷயம் விளங்கவில்லையா?

ஆகையால் எல்லா ஜீவஹிம்ஸைகளையும் பொதுவாகஎப்படி நிந்திக்கலாம் இவ்வித ஹிம்ஸாதோஷத்தை யகற்றுவதற்காகவே, பஞ்சமஹாயக்ஞம் முதலிய காரியங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. நமது சாஸ்திரங்களில், யாகம்முதலிய ஸத்காரியங்களில், செய்யப்படும் ஜீவஹிம்ஸையால் தோஷம் கொஞ்சமும் ஸம்பவிக்க மாட்டாதென்றும், ஆகாரத்திற்காக, அவரவர்களால் அவரவர்களுக்குறியதாக சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டுள்ள ஜீவஜந்துக்களின் ஹிம்ஸையைப் பிராயச்சித்தம் முதலியவைகளால் விலக்கிக்கொள்ளவேண்டியது அவசியமென்றும், மற்றவிடத்தில், நிஷ்காரணமாய், ஜீவஹிம்ஸையை ஒருபோதும் செய்யலாகாதென்றும், மூன்றுவிதமாக நிரூபணம் செய்யப்பட்டிருக்கின்றதேயொழிய

ஹிம்ஸை எல்லாவற்றிற்குமே, பாபமுண்டென்றே, இல்லையென்றே? நிரூபிக்கப்படவில்லை. ஆகையால் யாகம்முதலியவற்றில் ஜீவஹிம்ஸைக்குத் தோஷமில்லையென்றும் அவைகளைத்தவிர மற்றவிடங்களில் ஜீவஹிம்ஸைத் தோஷமுண்டென்றும் அவசியம் அங்கீகரிக்கவேண்டும். இவ்விஷயத்திற்குப் பல ஸ்மிருதி வசனங்கள் ஆதாரமாக எடுத்துக்காட்ட முடியுமாயினும், விரிவிற்கஞ்சி விடுத்தனம்.

ஆகவே, ஸநாதனதர்மிகளாகிய ஆஸ்திகர்களால் அங்கீகரிக்கப்பட்ட அஹிம்ஸாதர்மபரிபாலன சிரமந்தான் ஸர்வசிரேஷ்டமென்று யாவரும் நிச்சயமாய் உணரவேண்டும். தற்காலத்திய நவீன மேதாவிகளுக்கு, நிர்மல மனமுள்ள மஹான்களாலும் அறியமுடியா மஹிமைவாய்ந்த அஹிம்சா தர்மாஹஸ்யம் எப்படி புலப்படும். பிருகிருதவிஷயத்தையே நாடுவோம். சர்மாவானவர் அவரவர் கர்மத்திற்கு தக்கபடியுள்ளபுதியசரீரத்தை அடைந்திருக்கும், ஜீவர்களுக்கு சிராத்தம் முதலியவற்றல் திருப்தி விசேஷத்தையும், நரகலோகவாஸத்திலிருந்து விடுதலையையும் எப்படி நாம் உண்டுபண்ணக்கூடும். அன்றியும் ஒருவர் செய்யும் காரியத்தால் மற்றொருவருக்கு திருப்தி ஏற்படுமென்பதும் அநுபவவிருத்தம் என்று கூறுகிறர். இதுவும் பிசகேயாகும்.

மனு முதலிய மகரிஷிகள் சிராத்தம் முதலியகாரியங்களால் இறந்த முன்னேர்களுக்கு அக்ஷயதிருப்தியானது அவசியமுண்டு என்று நிருபணம் பண்ணியிருப்பதே, சிராத்தத்தால் பிதிருக்களுக்குத் திருப்தியுண்டென்பதற்குப் போதுமானபிரமாணமாகும் இறந்து நரகலோகத்தில் வசிக்கும் பாபியையும் கூட அமாவாஸ்யை, சங்கிரமணம், வ்யதீபாதம், கிரஹணம், முதலிய புண்ணிய தினங்களில் புத்திரர்களால் செய்யப்படும் சிராத்தாதிகளை, பிதிருகணங்கள் மூலமாக பெற்றுக்கொண்டு போவதன்பொருட்டுஅன்றைக்கு மட்டிலும் நரகயாதனையினின்றும் யமதூதர்கள் கரை ஏற்றிவிடுவதாகவும், அச்சமயம் புதல்வர்கள் சிராத்தம் முதலியவை செய்யாமலிருப்பார்களாயின் அவர்களை "சிராத்தம்செய்யாத பாபியென்றும் சபித்துக்கொண்டு அச்சமயத்திலும், நரகத்திலேயே நீண்டகாலம் வசிக்கும்படி யமதூதர்கள் இறந்த முன்னேர்களை நன்றாய்த் தள்ளிவிடுவார்களென்பதாகவும் சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. புதிய சரீரத்தை கர்மாநுகுணமாக அடைந்

தவர்களுக்கும், சிராத்தத்தால் திருப்தி ஏற்படலாமென்பதை பிரத்யக்ஷ மூலமாகவும் கண்டறியலாமென்றும் முன்பேநிரூபித்துள்ளோம். அதாவது நமக்குச் சிலஸமயத்தில் திடீரென்று ஏதாவது அன்னபானுதி வஸ்துக்கள் கிடைக்கும்பக்ஷத்தில், அப்படி கிடைப்பதற்கு புத்திரர்களால் செய்யப்படும் சிராத்தம் முதலியவே யே காரணமென்று ஊகித்தறிந்துகொள்ளவேண்டும். ஆகவே அவரவர்களின் புண்யபாப பலன்களை அவரவர்களனுபவித்தே தீரவேண்டுமென்பது வாஸ்தவமாயினும், புத்திராதிகளால் செய்யப்படும் சிராத்தம் முதலியவைகளால் இறந்த முன்னோர்கள் ஸ்வர்க்கம்முதலிய புண்ணியலோகத்தில் வஸிப்பார்களானல்மேன் மேலும் நீண்டகாலமந்த ஸ்வர்க்க ஸுகத்தையனுபவிக்கும்படி செய்துவிடலாமென்றும், நரகத்தில் வஸிப்பார்களானல் அதனின்றும் கரையேற்றிவிடலாமென்றும், இழிவு ஜன்மங்களைப் பெற்றிருந்தால் உத்தமஜன்மாவை விரைவிலடையும்படி செய்துவிடலாமென்றும், அங்கீகரிப்பதில் என்ன அநியாயமேற்பட்டுவிடும். ஆகவே அவரவர்களின் வினையை அவரவர்கள் அனுபவித்தே தீரவேண்டும் என்ற நியாயத்திற்கும் சிராத்தத்தால் பிதிருக்கள் திருப்தி எப்படி அடையக்கூடுமோவென்ற ஆக்ஷேபத்திற்கும் ஸம்பந்தமில்லையாதலால் நீதி விரோதமிருப்பதாக சர்மா கூறுவது அறியாமலேயேதான். அன்றியும் அவ்வித நியாயத்தை ஸ்ரீபகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் அருளியிருப்பதாக இவர்எழுதியிருப்பதும் மிகுந்த விந்தையாக இருக்கின்றது. இவ்வசனம் பகவத்கீதையிலில்லை என்பதையும் இவர் உணர்ந்தாரில்லை. இப்படியெல்லாம் சில வசனங்களைப் பிறரிடம் தெரிந்துகொண்டு அதன் விரோதம் ஸம்பவித்துவிடுமென்று ஆக்ஷேபம்பண்ணுவது பரிஹாஸத்துக்கிடமன்றோ ?

தவிர, சர்மா அவர்கள் தம்மித்திரானை வடக்கத்திப் பிராம்மணனுடைய சங்கையென்று சிராத்தப்பயன் நம்மிடம் கிடைப்பதாக வைதிகர்கள் சொல்வதற்குப் பிரத்தியக்ஷப் பிரமாணம் ஏதாவது எடுத்துக்காட்டமுடியுமா? என்ற சங்கைக்கும் நாம் முன்பே ஸமாதானம் கூறிவிட்டோம். அன்றியும் இங்கு நம்மவர்களால் சிராத்தாதிகளில் மந்திரவாக்கியங்களையும் நாமகோத்திரங்களையும் உச்சரித்துக்கொண்டு கொடுக்கப்படும் ஹவ்யகவ்யம் முதலியவை ளைலோகாந்தரத்தையும்,ஜன்மாந்தரத்தையும்பெற்றிருக்கும் முன்

னோர்கள் திருப்தியாகக் கிரஹித்துக்கொள்வதாக மத்ஸ்யபுராணத்திலேயே சொல்லப்பட்டிருக்கின்றது. அதிலுள்ள சிலவசனங்களை மட்டிலும்எடுத்துக்காட்டுவோம். அதன் மூலமாகவும் ஸந்தேஹம் தெளிக.

नाम गोत्रं पितॄणां तु प्रापकं हव्यकव्ययोः ।
नाममन्त्रास्तथाऽदेशाः भवान्तरगतानपि ॥
प्राणिनः प्रीणयन्त्येते तदा कारत्वमागतान् ।
देवो यदि पिता जातः शुभकर्मानुयोगतः ॥
तस्यान्नममृतं भूत्वा देवत्वेऽप्युपगच्छति ।
देवत्वे भोग्यरूपेण पशुत्वे तु तृणं भवेत् ॥
श्राद्धान्नं वायुरूपेण नागत्वेऽप्युपतिष्ठति ।
पानं भवति यक्षत्वे गृध्रत्वे च तथामिषं ॥
दनुजत्वे तथामांसं प्रेतत्वे रुधिरोदकम् ।
मानुषत्वेऽन्नपानादिनानाभोगकरं तथा ॥

என்றிவ்வாறு நிரூபணம் செய்துவிட்டுப் பிறகு சிராத்தத்தை சிரத்தையுடன் அனுஷ்டானம்பண்ணுவதின் மற்றமுள்ளப் பிரயோஜனங்களையும் நிரூபித்திருக்கின்றது. அதாவது—

रतिशक्तिः स्त्रियः कान्ताः भोज्यं भोजनशक्तता ।
दानशक्ति स्सविभवा रूपमारोग्यमेव च ।
श्राद्धपुष्पमिदं प्रोक्तं फलं ब्रह्मसमागमः ॥

என்று. இவ்வசனத்தில் ரூபம் ஆரோக்யம் போஜ்யம் ஸ்திரீகள் முதலிய பலன்கள் சிராத்தத்துக்கு அவாந்தரபலமேயொழிய முக்கியப்பிரயோஜனமில்லை என்னும் விஷயத்தை पुष्पम् என்ற பதத்தாலும் பிரும்மஸாக்ஷாத்காரத்தால் மோக்ஷத்தையடைவது சிராத்தத்திற்கு பரமபலனாகுமென்னும் விஷயத்தை 'ब्रह्मसमागम' பதத்தாலும் தெரிவிக்கப்பட்டிருப்பதையும் சர்மா கவனிக்கவேண்டும். அப்படியே ஹாரீதஸ்மிருதிவசனத்தையும் கவனித்து நண்பருக்கு நல்லுபதேசம் சர்மா செய்யவேண்டும்.

यन्नाम्नापातयेत्पिण्डं तन्नयेद्ब्रह्मशाश्वतम् । என்றும்
ये यजन्ति पितॄन्देवान् ब्राह्मणान्सहुताशनान् ।
सर्वभूतान्तरात्मानं विष्णुमेव यजन्ति ते ॥

आयुः पुत्रान्यशः स्वर्गं कीर्तिं पुष्टिं बलंश्रियं ।
पशून्सुखं धनं धान्यं प्राप्नुयात्पितृपूजनात् ॥ என்றும்,
श्राद्धकृत्समवाप्नोति यशश्च विपुलं नरः ।

என்றும் ஸ்மிருதிகளெல்லாம் நிஷ்பிரமாணமா?

பிரத்தியக்ஷமாகப் பிரயோஜனமிருப்பதாகத் தெரிந்தால் தான் சிராத்தம் முதலிய காரியங்களையனுஷ்டிப்பேன் என்று சொல்வது ஸரியாகுமா? எல்லா காரியங்களிலும் அவ்விதம் கூற முடியுமா? லௌகிகவியவகாரங்களிலும் இக்காரியத்தால் பிரயோஜனம் கட்டாயம் ஏற்பட்டே தீரும் என்ற நம்பிக்கையாலேயே அல்லவா யாவரும் பிரவர்த்திக்கின்றார்கள். சப்தப்பிரமாணத்தை யொப்புக்கொள்ளாமல் பிரத்தியக்ஷானுமானங்களால் மட்டிலும் வியவஹாரங்களை நாம் நடத்திவிடமுடியுமா?

பிரத்யக்ஷானுமானங்களால் தெறிந்துகொள்ளக்கூடிய உலக வியவகாரத்தைக் காட்டிலும் சப்தப் பிரமாணத்தால் தெரிந்து கொள்ளக்கூடிய வியவகாரந்தான் அதிகம் என்பது தேசிய ஸமாசாரப் பத்திரிகைகளை தினந்தோறும் விடாமல் படித்துவரும் நம்மவருக்குச் சொல்லவும் வேண்டுமோ? சப்தப் பிரமாணத்தில் அவநம்பிக்கையையும், அப்பிராமாண்யத்தையவலம்பித்து வாதமிடுபவர்கள், உலகவியவஹாரத்தைத் தெறிந்துகொள்வதன்பொருட்டு. "மித்திரன்" முதலியபத்திரிகைகளை எதற்காகவாசிக்கவேண்டும்? அதுசப்தமில்லையா? அப்பத்திரிகைகளினின்றும். தெறிந்துகொள்ளப்படும் விஷயங்களை, நேரிலும் காணலாமேயென்றால் அதுபோலவே, வைதிக, சுருதி, ஸ்மிருதிப்பிரமாணங்களினின்றும், வெளியாகும், தத்வங்களையும், பரிசுத்த மனமுள்ளவர்களால், நன்கு பிரத்யக்ஷமாய் அறிந்துகொள்ளக்கூடும். சப்தம்பிரமாணமில்லையென்றால், உலகமே ஊமைமயமாய் ஒப்புக்கொள்ளும்படியல்லவாநேரிடும், ஆகவேசப்தம்பிரமாணமேயில்லை. என்று சப்தாப்பிராமாண்யத்தை ஸ்தாபிப்பதும், சப்தத்தாலேயேதானன்றோ? சப்தாப்பிராமாண்யத்தைக்கூறும் சப்தம்மட்டிலுந்தான் பிரமாணமாகுமென்றால், மற்றசப்தம் என்னகுற்றம் செய்ததோ தெறியவில்லை?

வேதம் முதலியவைப்பிரமாணமில்லையென்று கருதும், சர்மாவும், அவாது நண்பரும், தம்முடைய அபிப்பிராயத்துக்கு ஸாதக

மாக, சுருதி, ஸ்மிருதிப்பிரமாணங்களை எதற்காக எடுத்துக்காட்டவேண்டும்? ஆகையால், சுருதிஸ்மிருதி, புராணம் முதலியப் பிரமாணநூல்களை அப்பிரமாணமென்பதும், அவைகளினின்றும் வெளியாகும் விஷயங்களும் நல்லவையல்லவென்றும்,

எவ்விதத்திலும் வர்ணாச்ரமதர்மவியவஸ்தையை மீறிவிடவேண்டுமென்றும்அதற்காகப்பாடுபடவேண்டுமென்றும் காலானுகுணமாக தர்மத்தை மாற்றிக்கொள்ளவேண்டுமென்றும் பெருங்கூக்குரலிடுவது மிகவும் அனுசிதமேயாகுமன்றோ? புராணங்களெல்லாம் அப்பிரமாணமென்று வாதம் புரியும் சர்மாவானவர் சிராத்தத்திற்கு பிரமாணமாக மத்ஸ்யபுராணவசனத்தை எடுத்துரைப்பது தகுதியாகுமா? இவ்விதம்சார்வாகமதஸித்தாந்தத்தையவலம்பித்து வைதிகமதத்தை இகழ்ந்து கூறுவது ஸரியல்ல. ஸ்ரீராமனை அயோத்திக்கு அழைத்துச் செல்வதன்பொருட்டுநாஸ்திகவேஷம்பூண்ட ஜாபாலிமகரிஷிக்கு ஸமாதானம்கூறுமிடத்தில் ஸ்ரீராமச்சந்திரனால் உபதேசம் பண்ணப்பட்ட கம்பீரவசனத்தையும் சற்று கவனிக்கவேண்டும்.

सत्यं च धर्मश्च पराक्रमं च भूतानुकंपां प्रियवादितां च ।
द्विजातिदेवातिथि पूजनं च पंथानमाहुस्त्रिदिवस्यसन्तः ॥
यथा हि चोरस्स तथाहिबुद्धः तथागतं नास्तिकमत्रविद्धि ।
तस्माद्धियः शंक्यतमः प्रजानां न नास्तिकेनाभिमुखो बुधस्स्यात् ॥

ஆகையால் ஸ்ரீராகவனைப்போல் நாமொவ்வொருவரும் ஆஸ்திகராக விளங்குவது நியாயமாகும்.

காசி முதலிய இடங்களில் ஜீவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு இங்கு பிராமணர்களிடம் அன்னமிட்டால் பசி தாகம் நீங்குவதில்லையே என்று கூறுவதும் பிசகு. ஒருவருடைய போஜனத்தால் மற்றொருவனுக்கு திருப்தியேற்படுவதில்லை என்ற லௌகிகநியாயத்தைக்கொண்டு சாஸ்திரமூலமாய்ஏற்படும் இறந்தவர்களின் திருப்திவிசேஷத்தை எப்படி இல்லையென்று மறுக்க முடியும். உலகத்தில் சில காரியங்களைப் பிறர் செய்தால் மற்றவருக்கு திருப்தியேற்படலாம், சில காரியங்களைப் பிறர் செய்தால் பிறருக்கு திருப்தியேற்படாமலும் இருக்கலாம். இது உலகஸ்வபாவமன்றோ?

அன்றியும் ஜீவித்துக்கொண்டிருக்கும் பெற்றோர்களுக்கு புத்திரர் முதலியவர்களால்தான் பசி தாகம் நீங்கவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லையே, தம் தம் பசிதாகத்தைத்தாமும் நிவர்த்தித்துக் கொள்ளக்கூடுமன்றோ? அப்படியிருக்க எதற்காக அவர்களுக்கு நாமன்னமிடவேண்டும், தாய்தந்தை, முதலியவர்களுக்கு ஜீவித்துக்கொண்டிருக்கும்போதும் பணிந்து பணிவிடைசெய்வதாலும், திருப்தி யேற்படலாமல்லவா? இறந்த முன்னோர்களுக்கோவேன்றால், அப்படியில்லையே. அவர்களுக்கு சிராத்தமூலமாகத்தான் திருப்தி யேற்படவேண்டுமேயொழிய வேறுவழியில்லை. ஆகையால்தான் ஸ்மிருதிகளும், பிதிரு திருப்திக்காகச் சிராத்தமவசியம் செய்தே தீரவேண்டுமென்று வற்புறுத்துகின்றன. ஜீவிப்பவர்களுக்குச் சிராத்தம் முதலியவை செய்யக்கூடாதென்றும் நிஷேதிக்கின்றன. தவிற,சிராத்தத்தால்,முன்னோர்களுக்கு திருப்தி ஏற்படுவது இல்லைஎன்றே வைத்துக்கொண்டாலும்,சித்தசுத்தியின் பொருட்டாவது,ஸந்தியாவந்தனம், ஜபம்,ஹோமம், ஸ்னானம்,முதலிய நித்யகர்மாவைப்போல், சிராத்தத்தையும் விடாமல் அவசியம நுஷ்டிக்கத்தான் வேண்டும். சிராத்தம் முதலிய நித்யகர்மாக்களை அநுஷ்டிக்காதவன் வைதிகனாகமாட்டானன்றோ ? ஆகையால் சிராத்தத்தை விடலாகாது என்பதுஸித்தம்.

அன்றியும் सपिताप्रथमेह्न् என்ற யஜுர்வேதவாக்கியத்தைக் கொண்டு இறந்தவர்கள் 12 நாளைக்குள் ஜன்மாந்தரம் பெற்றுவிடுவதாக சர்மா அபிப்பிராயப்படுவதும் வெகு அஸங்கதம்.

இனி ஜீவர்கள் ஜன்மாந்தரத்தையடையும் விதத்தைக் கீழ் வருமாறு கண்டுகொள்ளவும்.

ஜீவர்கள் இந்த ஸ்தூலதேகத்தை விட்டு வேறு தேகத்தைப் பற்றிக்கொண்டே இன்பதுன்பங்களை அநுபவிப்பதற்காக லோகாந்தரம் செல்லுகின்றனர் என்பதே சாஸ்திரங்களின் நிர்ப்பயமாகும். ஆனல் லோகாந்தரத்தில் இன்பதுன்பங்களை புசிப்பதற்கு வேண்டிய சரீரத்திற்கு ஆரம்பகமாயுள்ள பஞ்சமஹாபூதங்களையும், இங்கேயே பற்றிக்கொண்டு தானவர்கள் லோகாந்தரஞ் செல்கின்றனர்.

(தொடரும்) வி. ஜகதீச்வரசாஸ்திரிகள்.